நாங்கள்

501

ஸ்பெஷல்தான் உபயோகிக்கிறோம் - ஏனென்றால்,

மிருதக் கொழுப்பற்றது

501 ஸ்பெஷலைத்தவிர 501 வாஷிங்ஸோப்பு ஒன்றும் உள்ளது. அதன் விலை இன்னும் குறைவு. நம் வீட்டில் எல்லா அவசியங்களுக்கும் தகுந்த ஸோப்பு. கியூபுகளாகவும், நீளக் கட்டிகளாகவும், வில்லைகளாகவும் சிவல் களாகவும் எல்லாப் பெரிய கடைகளிலும் கிடைக்கும், 501 ஸ்பெஷல் வில்லைகளாக 3 சைஸ்களில் பெட்டிகளில் பாக் செய்து விற்கப் படுகிறது.



டாம்கோ விற்பனை இலாகா :
1, வாரன் ரோட், பீமன்பேட்., மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்.

FS. 1948.

மழை ஜலம் போவதற்கான குழாய்கள் & பிட்டிங்குகள்



எல்லா நிலைகளுக்கும், அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்பட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றுமில்லையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங்ஸ் கம்பெனியார்கள் பல வருஷங்களாக வார்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

காட்லாகும், விலை விவரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.
தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

எம்மிடம்

கோவை புதுமலர்நிலையம்	ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
அல்லயன்ஸ் கம்பெனி	இரத்தின நாயகர் சன்ஸ்
கலைமகள்	ஜம்புநாதன்
	சங்கு
நவயுகப் பிரசுராலயம்	பதி அண்டு கம்பெனி
ஜகன்மோகினி	சக்தி

அன்பு நிலையம்
(சுவாமி சுத்தானந்த பாரதியார் நூல்கள்)
வெளியீடுகளும், இன்னும் இதர புத்தகங்களும் கிடைக்கும்.
புத்தக ஜாபிதாவுக்கு எழுதவும்.

எமது எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். நேரில் விஜயஞ்செய்து தேவைக்கு ஆர்டர் செய்யவும். எல்லா 'மித்திரன்' ஏஜெண்டுகள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட் ரோடு : : மதராஸ்.

நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரியெடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலைநிறைந்த கூந்தலில்லாமல், இச் சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயதுமுதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேல் செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

சூதகம் நின்றிருந்தால்
3 நாட்களில் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay.
Phone 21343.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor. C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 49 3-1-'43 வாரப்பதிப்பு Price 2 Annas.

சென்றவார நிகழ்ச்சிகள்

கல்கத்தாவில் ஜப்பான் குண்டு வீச்சு

இம மாதம் 20-ந் தேதி முதல் 29-ந் தேதி வரையில் ஜப்பானியர் 5 தடவைகள் கல்கத்தா மீது குண்டுகளை வீசியிருக்கின்றனர். அவர்கள் தங்கள் இஷ்டப்படி கண்ட கண்ட விடங்களிலெல்லாம் குண்டுகளைப் போட்டனர் என்றும், அவர்கள் தாக்கிய இடங்கள் ராணுவ சாதனங்கள் இருக்கும் பகுதிகள் என்று சொல்ல முடியாதென்றும் ராணுவத்தைச் சேராத பிரதேசங்களையும் தாக்கினார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது.

முதன் முதலாக மும்முறை நடந்த எதிரி குண்டுவீச்சு காரணமாக 25 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 100 பேருக்குக் காயம். இதில் சிலருக்கு உபாயமானகாயம். இரண்டொரு இடங்கள் தீப்பற்றியெறிந்ததெனினும் உடனே அது அணைக்கப்பட்டது. இறந்தவர்களெல்லாம் இந்தியர்களே என்றும், ஸ்திரீகளும், குழந்தைகளும்கூட உயிரிழந்னர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

24-ந தேதியன்று நள்ளிரவில் ஜப்பானிய விமானங்கள் கல்கத்தாவை மீண்டும் தாக்கின. உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் சொற்பம்.

25-ந் தேதியன்று நள்ளிரவுக்குச் சற்று முன்பாக விமானப் படையெடுப்பு எச்சரிக்கை செய்யப்பட்டது. 3-மணி நேரம் வரை இவ்வெச்சரிக்கை நீடித்தது. இதற்கு முன் இவ்வளவு நேரம் அபாய எச்சரிக்கை நீடித்ததில்லை. சில குண்டுகள் விழுந்தன; உயிர், பொருள் சேதங்கள் குறைவு. விமான எதிர்ப்புப் பீரங்கிகளின் முழக்கம் பலமாயிருந்தது. வானில் நமது விமானங்களுக்கும் எதிரி விமானங்களுக்கும் கடும் போர் மூண்டது. எதிரிகள் வீசிய குண்டுகளில் முக்கியமானவை ஆட்களைக் கொல்லக்கூடிய குண்டுகளே. ஜனங்கள் வசிக்கும் பிரதேசங்களில் குண்டு விழுந்ததால் கண்ணாடிக் கதவுகளும் ஜன்னல்களும் நாசமுற்றன. வங்கக் கவர்னர் குண்டு வீசப்பட்ட பகுதிகளைப் போய் பார்வையிட்டார்.

வைஸ்ராய் நிர்வாக சபையில் ஸிவில் பாதுகாப்பு மெம்பரான ஸர் ஸ்ரீ வத்ஸவா கான்பூரில் கல்கத்தாவிலிருந்து எதிரிகுண்டு வீச்சு காரணமாக ஒருவரும் வெளிவரவில்லையென்று கூறினர். இது குறித்து 'ஸ்டேட்ஸ்மென்' ஓர் தலையங்கம் எழுதியிருக்கிறது.

அதெல்லாம் வீண் புரட்டு என்று அப்பத்திரிகை எழுதியிருக்கிறது. கல்கத்தாவிலிருந்து ஒருவரும் வெளியேறவில்லை என்ற கூற்றை அப்பத்திரிகை மறுத்திருப்பதுடன், ஒவ்வொரு வண்டியிலும் ஏராளமான பேர் வெளியேறப் பார்ப்பதாகவும், இது இச்சமயத்தில் சகஜம் என்றும், ஆனால் தங்கியிருப்பவர் தைரியம் இழக்கவில்லை என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

* * * *

சங்கீத வித்வான் மறைவு

காலஞ் சென்ற வித்வான் சியாமா சாஸ்திரியாரின் கொள்ளு பேரனாகிய சங்கீத வித்வான் ஸ்ரீ சியாமா சாஸ்திரி என்ற ஸ்ரீ வெங்கிடசுப்பிரமணிய அய்யர் சென்ற 12-ந் தேதி தஞ்சையில் காலமானார். இவர் சங்கீத வித்வான் மட்டுமன்றி சித்திரப் படங்கள் வரைவதில் மகா நிபுணர். அத்துடன் சென்னை சங்கீத வித்வத்சபையின் நிபுண ஆலோசனைக் கமிட்டியில் அங்கத்தினராக இருந்து அரிய சேவைகளிலும் ஈடுபட்டிருந்தார். இவருக்கு வயது 67..

* * * *

சுருக்கெழுத்து போட்டியில் ஸ்திரீக்கு பதக்கம்

இந்த வருஷத்திய சுருக்கெழுத்துப் போட்டியில் (180 வார்த்தைகள்) ஸ்ரீமதி கே. பார்வதி அம்மாளுக்கு தங்கபதக்கம் அளிக்கப்பட்டது. வெள்ளிப் பதக்கம் (150 வார்த்தைகள்) ஸ்ரீ எ. சுப்ரமணிய அய்யருக்கு அளிக்கப்பட்டது.

* * * *

பம்பாயில் பங்கீடு

பம்பாய் நகரில் உணவுப் பொருள்கள் பங்கிடைச் சர்க்கார் சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வருவரெனத் தெரிகிறது. இங்கு உணவுப் பொருள் தட்டு அதிகமாக இருப்பதால் தான் சர்க்கார் இம்முடிவுக்கு வரவேண்டிய அவசிய மேற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மற்ற மாகாணங்களிலிருந்தும், இந்தியாவிற்கு வெளியே இருந்தும் உணவுப் பொருள்களைத் தருவிக்க முயற்சிகள் நடந்து வருகின்றன இந்த இறக்குமதிகள் காலா காலத்தில் வந்து சேர்ந்து விட்டால் அநேகமாகப் பங்கீடு தவிர்க்கப்படலாம் ஆனால் எந்தெந்த மாகாணங்களில் உணவுப் பொருள்கள் யதேஷ்டமாக இருக்கின்ற[...]ன்வோ அவை தங்களுக்குத் தட்டு ஏற்படக்கூடிய காலத்துக்காக அவற்றைக் கைவசம வைத்துக் கொள்ளப் பிரியப்படுவதாக அடிக்கடி கூறப்படுகிறது.

ரிஸர்வ் பாங்கியின் மத்திய போர்டுக்கு டைரக்டராகவும், சென்னை போர்டின் தலைவராயும் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீனிவாஸன் சமீபத்தில் தெரிந்தெடுக்கப்பட்டார்.

* * * *

பண்டித மாளவியாவுக்கு ஆயிரம் பசுக்கள்

சென்ற டிசம்பர் 30-ந் தேதி போது பண்டித மாளவ்யாவுக்கு 82-வருஷம் பூர்த்தியாகிறது அகில இந்திய கோ ரக்ஷக மண்டலத்தினர் அந்தச் சமயத்தில் பண்டிதருக்கு ஆயிரம் பசுக்களைத் தானமாக வழங்க முடிவு செய்துள்ளார்கள்

* * *

இந்திய விமானப்படை விஸ்தரிப்பு

எதிரியுடன் போராடிவரும் இந்தியருக்கு இந்திய ஸேனாபதி ஸர் ஆர்ச்சிபால்டு வேவ[ல்] விடுத்துள்ள புதுவருஷச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

இப்பொழுது யுத்தம் புதி[...]தொரு கட்டத்தை அடைந்திரு[...]கிறது. இறுதி வெற்றிக்கா[...] அறிகுறிகளை இப்பொழுது நா[...] காணலாம். கஷ்டங்கள் அதி[...]மாக இருக்கலாம்; ஆயினு[ம்] போர்க்களத்தில் இருந்தாலும் சரி, தொழிற்சாலைகளில் இரு[ந்]தாலும் சரி, நீங்கள் தோ[...] முறையில் வேலை செய்தால் மு[...]லவக்காண்பது நிச்சயம்.

இந்திய விமானப் படையி[ல்] பெரியதொரு விஸ்தரிப்பு ஏ[ற்]பட்டிருக்கிறது. அதன் சரித்[தி]ரத்திலேயே முதல் தடவையா[க] இப்போது அது பர்மாவில் ஒ[...] பெரிய வல்லரசுடன் போரா[டி] வருகிறது. ஆயிரக்கணக்கா[ன]வர்கள் பத்திரமாக இந்திய[ா] வந்து சேர உதவியது பிரிட்டி[ஷ்] இந்திய விமானப்படை.

* * * *

ஜவஹர் படங்களுக்குத் தடை

சீனாவுக்கும் பர்மாவுக்கு[ம்] ஹாஜ் யாத்ரா சமயத்தி[ல்] மெக்காவுக்கும் பண்டித ஜ[...]

சங்கீத வித்வத் சபை மகாநாடு

சென்ற மாதம் கடைசி வாரத்தில் சென்னை சங்கீத வித்வத் சபை மகாநாடு நடந்தது ஸர் எம். வெங்கட சுப்பராவ் அதைத் திறந்து வைத்தார். மழவராயனேந்தல் ஸ்ரீ சுப்பராம பாகவதா தலைமை வகித்தார.

ஹார் செய்த விஜயத்தையொட்டிப் பிடிக்கப்பட்ட இரண்டு படங்களையும் பீஹார் மாகாணத்தில் காட்டக்கூடாது என்று பீஹார் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

* * * *

ஸர் சிக்கந்தர் காலமானார்

பஞ்சாப் பிரதம மந்திரி ஸர் சிக்கந்தர் ஹயத்கான் திடீரென மார்படைப்பினால் சென்ற 26-ந் தேதி இன்று நடு ராத்திரி இறந்து போனார். ஸர் சிக்கந்தருக்கு வயது 50.

அன்று பகல் தான் அவர் தமது மூத்த புதல்வர் மேஜர் ஷௌகத் ஹயத்கான் விவாகத்தை முன்னிட்டு பெரியதொரு விருந்து நடத்தினார். இவ் விருந்துக்குக் கவர்னரும் மற்றும் சுமார் 1000 பிரபலஸ்தர்களும் வந்திருந்தனர். இன்றிரவே அவர் திடீரென இறந்தது தான் அதிக வருத்தத்தைத் தருகிறது.

ஸர் சிக்கந்தர் இரவு 9-30 மணி வரை சுகமாகவே இருந்தார். அதன் பின் ஏதோ வயிற்றில் வலி ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார். உடனே "புரூட் ஸால்ட்" கொடுக்கப்பட்டது. பிறகு அவர் உற்சாகத்துடன் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தார். தமது புத்திரர்கள் இருவரது கலியாண சம்பந்தமாக ஏற்பட்ட செலவுக் கணக்கையும் கவனித்தார். அதற்கப்புறம் அவர் படுக்கைக்குப் போனார்; சுமார் 12-மணிக்கு அவர் இறந்து போனார். கர்னல் பிராஜ்கர் என்ற டாக்டரை அவசரமாக அழைத்தார்கள். ஆனால் அவர் வருவதற்கு முன்னமே ஸர் சிக்கந்தர் ஹயத்கான் மாண்டு போனார்.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

போர்த்துகலில் இறங்கிய யு. எஸ். யுத்த விமானங்கள்

சென்ற மாதம் 27-ந்தேதி தினம் 2 அமெரிக்க லாக்ஹீடு யுத்தவிமானங்களும் 2 என்ஜின் உள்ள வெடி குண்டெறியும் அமெரிக்க விமானங்களும் இறங்கின. 2 யுத்த விமானங்களையும் அழிக்க அவற்றின் விமான போட்டிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. ஆனால் வெடி குண்டெறியும் விமானத்திலிருந்த ஒரே அமெரிக்கர் அதிகாரிகளிடம் சரண் புகுந்தார்.

* * * *

டியுனிஸியா போராட்டம்

வட ஆப்பிரிக்காவிலுள்ள நேச அதிகாரிகள் அறிவிப்பதாவது:—

அமெரிக்க விமானங்கள் மெட்ஜஸ் எல்பாவுக்கு அருகே போர்க்களத்திலுள்ள பீரங்கி நிலையங்கள் மீதும் எதிரி மோட்டார்கள் மீதும் குண்டுகளை வீசின.

பிராஸ்வில் ரேடியோ மூலம் வெளியான பிரஞ்சு அதிகாரிகளது அறிக்கையின் சாரம்:—

சாட் பகுதியிலிருந்து முன்னேறும் பிரஞ்சுப் படைகள் சென்ற இரு தினங்களாக (லிபியாவுக்குத் தெற்கேயுள்ள) பெஸானில் எதிரிகளுடன் போராட்டம் நடத்தின. நமது முன்னணித் துருப்புகள் எதிரியின் மோட்டார் படையொன்றைத் துரத்தியடித்தன.

சென்ற 27ந்தேதி ஜப்பானியப்பிரதம மந்திரியான ஜெனரல் டோஜோ பேசுகையில் பின் வருமாறு கூறினார்:—தற்போது முதல் உண்மையான யுத்தம் ஆரம்பமாகிறது. யூனனிலும் கிழக்கிந்தியாவிலுமுள்ள தளங்களிலிருந்து பர்மாவை பிரிட்டிஷ் யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப் படைகள் தினம் தாக்க முயலுகின்றன. சாலமன்ஸ் தீவுகளில் எதிரிக்குச் சிறந்த விமான தளங்கள் இருக்கின்றன. இதனால் சப்ளைகளையும் உணவையும் தளவாடங்களையும் இறக்குவதில் கஷ்டமிருக்கிறது. சீனாவில் ஜப்பானியப் படைகள் 30 லக்ஷம் சங்கிங் படைகளையும் 6 லக்ஷம் பொதுவுடமைத் துருப்புகளுடனும் பெரிய போர்களையும் சிறிய போர்களையும் நடத்த வேண்டியிருக்கிறது.

* * * *

வைஸ்ராய்க்கு பிரிட்டிஷ் பிரமுகர்கள் தந்தி

லார்டு லின்லித்கோவின் உத்தியோக காலம் நீடிக்கப்பட்டிருப்பதை முன்னிட்டு, தற்போதைய சிக்கலைத் தீர்க்க இந்தியத் தலைவர்களுடன் சேர்ந்து ஒரு புதிய முயற்சி செய்யுமாறு அவருக்கு தேசீய சமாதான சபை நிர்வாகிகள் ஒரு தந்தி அனுப்பியுள்ளர். அதில், சபை தலைவரான ஸர் ஆர்தர் எடிங்டன், பர்மிங்ஹாம்பிஷப் டாக்டர் பார்னஸ், யூத சமூகத் தலைவர் டாக்டர் ஹெர்ட்ஸ், லேடி பார்மூர், கான்டர்பரிடீன், டாக்டர் ஹயுலட் ஜான்ஸன் முதலியோர் கையெழுத்திட்டுள்ளர்.

* * * *

இந்திய நெருக்கடி : ரஸ்ஸல் யோசனை

இந்தியப் பிரச்னை சர்வதேசப் பிரச்னைகளில் மிக முக்கியப் பிரச்னையெனப் பெர்ட்ராண்டு ரஸ்ஸலும் பாட்ரீஷியா ரஸ்ஸலும் ஒரு சஞ்சிகைக்கு எழுதியுள்ள கட்டுரையில் கூறியிருக்கிறார்கள். இரண்டு விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள். முதலாவது அவர்கள் கூறுவதாவது:—இந்தியக் கோரிக்கையாகிய சுயராஜ்யத்தை அவசியம் அளித்துவிட வேண்டும். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு முக்கிய பாகமாக டொமினியன் அந்தஸ்தை அதற்கு அளிக்கக்கூடாது. ஆனால் நவீன உலகத்தில் இதர தேசம் எதையும் போல் இந்தியாவுக்கும் சுதந்திர உரிமை இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இரண்டாவதாக தேசங்களுக்கு அளிக்கப்படும் இந்த சுதந்தர உரிமை ஒரு வரையறைக்குட்பட்டதாகவிருக்க வேண்டும். எந்த தேசமும் மற்றொரு தேசத்திற்கு அடிமையாகவிருக்கக்கூடாது.

மேலும் இருவிதமான தீர்மானங்களைச் செய்ய வேண்டும். முதலாவதாக யுத்த கால சம்பந்தமாகவும், இரண்டாவதாக யுத்தத்திற்குப் பிறகு இந்தியாவின் அந்தஸ்து சம்பந்தமாகவும் தீர்மானங்கள் செய்ய வேண்டும். யுத்த காலத்தில் வெற்றி ஏற்படுவதற்கான வழியில் பிரச்னையைக் கையாள வேண்டும். அவசரமாகச் செய்யும் முடிவால் அபாயமே ஏற்படுமென்று நாங்கள் வற்புறுத்துகிறோம். முக்கிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கும் பல கட்சிகளின் தலைவர்களுடன் சம்பாஷிப்பதற்கும் நேசதேசங்களின் கமிஷனொன்று இந்தியாவுக்குச் செல்ல வேண்டும். யுத்த முயற்சிக்கு உதவி செய்யும் முறையில் (யுத்த காலத்தில்) இடைக்கால ஏற்பாடுகளைச் செய்வதற்கும், யுத்தம் முடிந்த பிறகு இந்தியப் பிரச்னை சம்பந்தமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டிய பரிகாரத்திற்கும் இந்தக் கமிஷன் வழி கண்டு பிடித்து சிபார்சு செய்ய வேண்டும். பலிக்காது போன ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் சம்பாஷணையை மேற்படி கமிஷன் வெற்றியேற்படுமென்ற அதிக நம்பிக்கையுடன் தொடர்ந்து நடத்த வேண்டும். ஏனெனில் இந்தக் கமிஷன் பிரிட்டிஷ் ராஜ்யத்திற்கு மட்டுமோ அல்லது வெள்ளையருக்கு மட்டுமோ பிரதிநிதியல்ல.

* * * *

குதிக்கும் ஜெர்மன் வெடிகள்

லிபியாவில் 8-வது படையுடனிருக்கும் நமது நிருபர் எழுதுவதாவது:-பின்வாங்கும் ஜெர்மனியர் ஒரு குதிக்கும் சுரங்க வெடியை உபயோகிக்கின்றனர். 'இது ஒரு சுகர டப்பாபோலிருக்கிறது. இதுவெடித்ததும் குதித்து அருகிலுள்ளவர் முகவாயின் அடிப்பாகத்தைத் தாக்கிப் பின் முகத்தைச் சின்னபின்னமாகத் தகர்க்கிறது. இவை தூண்டில் முள்போலிருப்பதாகக் கூறப்படுகிறது. வண்டியை விட்டிறங்கியதும் தூண்டில் முள் ஏதேனுமிருக்கிறதா என்று கேட்பது சகஜமாக இருக்கிறது.

* * * *

மத்திய தரைக் கடலில் பெரிய போருக்கு ஏற்பாடு

மத்திய தரைக் கடலில் ஒரு பகுதியில் புதிய போராட்டத்திற்காக நேசக் கட்சியும் எதிரிகளும் பெருவாரியான கடற்படைகளைத் திரட்டி வருகின்றனர். ஜிப்ரால்டரில் ஏராளமான யுத்தக் கப்பல்களும் விமானங்களும் திரண்டு கொண்டிருப்பதாக மாட்ரிட்டிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது.

* * * *

ஸ்வீடனில் ராணுவ முஸ்தீப்பு

வருகின்ற குளிர், வசந்த காலங்களில் ஸ்வீடிஷ் சர்க்கார் தங்களது ராணுவ முஸ்தீப்புகளை பலப்படுத்தத் தீர்மானித்திருக்கின்றனர். இதற்கு உலக ராணுவ நிலைமையில் திடீரென மாறுதல்கள் ஏற்படக்கூடியதாக இருப்பதே காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் சொற்ப கால பயிற்சிக்கு வருமாறு அழைக்கப்படுவர். பொதுவாக ஒரு மாதப் பயிற்சி அளிக்கப்படும்.

* * * *

டார்லான் கொலை

பிரஞ்சு ஆப்பிரிக்க ஹைகமிஷனராக இருந்த அட்மிரல் டார்லான் ஆல்ஜியர்ஸிலுள்ள அவரது காரியாலயத்திலேயே கொலையுண்டார். அங்கு காத்

திருந்த ஒரு பிரஞ்சு வாலிபன் டார்லான் காரியாலயத்துக்குள் பிரவேசித்ததும் அவரை நோக்கி மும்முறை சுட்டான். டார்லான் படுகாயமுற்று விருந்தார். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்க்கு முன் அவருக்கு உயிர் போய்விட்டது. குற்றவாளிக்கு பிரஞ்சு ராணுவக் கோர்ட்டார் மரண தண்டனை விதித்தனர். துப்பாக்கிகள் தாங்கிய ஒரு கோஷ்டி அவனைச் சுட்டு தண்டனையை நிறைவேற்றியது. குற்றவாளி பிரான்ஸைச் சேர்ந்தவனென்றும், அவன் தாய் இத்தாலியில் இருப்பதாகவும் தெரிகிறது. அவ்விருவரும் பரஸ்பரம் எழுதிய பல கடிதங்களை அதிகாரிகள் கைப்பற்றினராயினும் அவைகளிலிருந்து டார்லான் கொலை மர்மம் துலக்கவில்லை. டார்லானின் பதவிக்கு இப்போது ஜெனரல் கிராட் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

துருக்கியில் கோர பூகம்பம்

மத்திய அனடோலியாவில் டோகாட் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 1000 பேருக்கு மேல் கொல்லப்பட்டதுடன் 3000 பேர் காயமடைந்ததாக அதிகாரிகள் அறிவிக்கின்றனர். ஒரு சிறு பட்டணம் அடியோடு அழிந்து விட்டது.

சீவக சிந்தாமணி-28.

இரத்தினப்பிரபை உபதேசம்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

அருகதேவன் கோயிலுக்குச் சீவகனும் அவன் மனைவியரும் சென்றனர். கோயிலை வலம் வந்து அருகனை வணங்கினர். சீவகன், அருகதேவனை வணங்கித் துதித்து மலர்களால் அருச்சித்தான். அப்போது, ஆகாயத்தில் வந்து அருகன் கோயிலை வலம் செய்த சாரணர் இருவர் கீழே இறங்கி அங்குள்ள அசோக மரத்தின் நிழலில் பளிங்குக் கல்லில் அமர்ந்தனர். சீவகனும் தேவியரும் அவர்களைக் கண்டு வணங்கி வாழ்த்தினர். சாரணர் இருவரும் சீவகனுக்கு ஆசி கூறி, "வேந்தே, அரசாளுதல் உனக்கு இன்பம் அளிக்காதே" என்றனர். தன் மனக் கருத்தை உணர்ந்து அவர்கள் கூறியதற்குச் சீவகன் வியந்தான்; "அடிகளே, பிறவிகளை நீக்கும் வழியறியாதேன்; பல பிறவிகளிலும் செய்த தீவினை யென்னும் இருள் கெடும்படி தவம் செய்து ஞானத்தை அடையுமாறு எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினான்.

அதற்குச் சாரணர் மனமிரங்கினர். அவ்விருவருள் மூத்தவனான இரத்தினப் பிரபை என்பவன் சீவகனுக்கு உபதேசம் செய்ய எண்ணினான். சந்திரன் தனது கிரணங்களைப் பாற்கடலில் சொரிவதுபோல் இரத்தினப் பிரபை தருமத்தைச் சீவகனுக்கு உபதேசிக்கலானான்.

"வேந்தே, தவத்தால் பெறுகின்ற மக்கள் உடம்பு. அவ்வுடம்பு தனக்குரிய நூறு வருஷங்களும் நில்லாமல் கருப்பம் முதலாக அழிகின்ற அழிவு. நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்கின்ற நாற்கதியின் துன்பம். தருமத்தால் துணியப்படும் பொருள். அதைத் துணியும் துணிவு சீலத்தின் நிலை தானம், தானத்தாலும் சீலத்தாலும் காட்சியாலும் பெறும் பயன். மோட்ச லக்ஷணம் முதலியவற்றை முறையே யான் சொல்லுவேன். முதலில் பெறுதற்கருமை என்பதைக்கேள்" என்று கூறலானான். சீவகன் மனைவியருடன் அமர்ந்து கேட்கலானான்.

பெறுதற்கு அருமை

"அரச, இழிவான, பிறயாக்கைகளைப் பெறுமல், மக்கள் யாக்கையைப் பெறுதல் அரிது. மக்களுடம்பு பெற்றாலும் நீர்வளம் நிறைந்த நாட்டில் பிறத்தல் அரிது. அவ்வாறு பிறப்பினும், விலங்குகளைக் கொன்று தின்னும் வேட்டுவர், வலைஞர் முதலிய இழிந்த குலத்தில் பிறவாமல் நற்குலத்தில் பிறத்தல் அரிது. அவ்வாறு பிறந்தாலும், அங்கம் குறைவின்றி அழகான மிக்கதொரு உடம்பைப் பெறுதல் அரிது. அவ்விதம் பெறினும் குற்றத்தைதரும் பரசமயங்களைக் கைவிட்டு அருக சமயத்தைத் தழுவி ஒழுகுதல் அரிது.

நிலையாமை

இனி நிலையாமையைக் கேள்; மக்களுக்கு விதித்த ஆயுள் முழுவதும் நிலை பெறுதல் அரிது. வெள்ளியும் பொன்னும் சேர்ந்தாற்போல் சுக்கிலமும் இரத்தமும் வயிற்றில் பொருந்தும்; உடனே தோன்றி மறையும் மின்னலையும் கொப்புளத்தையும்போல் அது கெட்டுவிடுதலும் உண்டு. அவ்வாறு கெடாமல் வெண்ணெய்போலத் திரண்ட பின்பு அழிதலும் உண்டு. அவ்வாறு கெடாமல், ஆமைபோலும் தன்மையைப் பெற்ற பின்னர் அழிதலும் உண்டு. பிறந்த பின்னர் அழிதலும் உண்டு. பெயரிடும்பொழுதும் இறத்தலுண்டு. கல்வி கற்கச் செல்கையில் அழிதலும் உண்டு. அவ்வாறின்றிக் கற்ற பின்பு அழிதலும் உண்டு. மகளிரோடு இன்புற்று இருக்கும் காலத்து அழிதலும் உண்டு. புதல்வரைப் பெற்று மகிழும் காலத்தும் அழிவுண்டாகும். அக்காலங்களிலெல்லாம் அழிவில்லையாயினும் முதுமை எய்திய பின் திண்ணமாய் அழிவுறும். ஆதலால் இதற்கு வேறான நிலைபொருளை நீ அறிந்து கொள். அரசனே இம் மக்கட் கதி அல்லாமல், தேவருலகம் சென்று தேவரை வென்ற சக்கரவர்த்திகளும் இவ்வுலகில் நிலைபெறவில்லை.

நரக கதித்துன்பம்

இனி, நரக கதித்துன்பத்தைக் கேள். நரகத்தில் நரகர் படும் துன்பத்தை இத்தன்மைய என்று கூற நினைத்தாலும் உள்ளம் நடுங்கும். எதிர் நின்று போர் செய்யாமல் வஞ்சகமாக எளியவரைக் கொன்ற தீயவர், பெருங்காற்றால் பனங்கனிகள் உதிர்வபோல் நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர். அவருக்கு உணவு விஷம். விஷத்தை உண்ட பின்பும் தீவினையால் அவர் இறந்து போகாது வருந்துவர். ஐம்பொறியையும் அடக்காத தீயவர், ஈட்டி, வேல், வாள் முதலிய நடப்பட்ட பூமியில் கிடப்பர். தசைகளைத் தின்றவர் எரியும் தீயில் வீழ்ந்து துடித்துக் கிடப்பர். உயிரை வருத்திய மாந்தரை பலவாறு தண்டிப்பர். வயிர முள்ளுகளில் ஏற்றுவர். கீழே தீயைக் கொளுத்துவர். கழுவில் ஏற்றுவர். அவர் கொன்ற விலங்கு முதலியவற்றின் ஒரு மயிருக்கு ஒரு தசையாக அவர் உடலை அறுப்பர். உடும்புகளைக் கொன்றவரைச் செந்நாய் கௌவி உதறும். தருமத்தை விட்டுப் புலாலை உண்டவரை நரகத்துக் காவலர் அழைத்து அவர் வாயில் உருக்கிய செப்புப் பாளத்தை ஊற்றுவர். அதற்குப் பொறுக்காமல் ஓடுகின்றவரைத் தடுப்பதற்குப் பூமியில் ஊசிகளைப் பதித்திருப்பர். அதில் காலை வைத்து அழுந்தப்பெற்று வலி பொறுக்காமல் கதறுவர். பிறன் மனைவியைத்தழுவியவனை உருக்கிய செப்புப் பிரதிமையைத் தழுவத் தழுவச் செய்வர். விலங்குகளையும் மீன்களையும் தின்றவர்களை தீயில் அழுத்துவர். நரக காவலர் பலரும், தீயவரைப் பிளந்தும், பொரித்தும், குத்தியும் கொல்வர். தீயவர் நீரை விரும்பி வறட்சி கொண்ட நாவுடன் தடாகங்களை நோக்கி ஓடுவர். அத்தடாகம் சீயால் நிறைந்த குழம்பு என்பதைக் கண்டதும் "ஐயோ" என்று கூவி அழுவர், செம்பை உருக்கிய குழம்பிலே அழுத்தப்பெறுவர். செக்கிலிட்டு ஆட்டப் பெறுவர். பொடிப் பொடியாக அறைக்கப்படுவர். இவ்வாறு துன்புறுபவர் யாவர் என்றால் கொலைஞரும், உள்ளம் கொடியவரும், கொடுந்தொழில் செய்பவரும், நல்வினை, தீவினை, தானம் என்பவற்றிற்குப் பயனில்லை என்பவரும், மறுபிறப்பில்லை என்பவரும், கடவுள் இல்லை என்பவரும் ஆவர்.

விலங்கு கதித்துன்பம்

நரகம் எப்பொழுதும் தீயின் தன்மை உடையது. நரகர் துன்பமும் விலங்குகளின் துன்பமும் ஒன்றே. உன் பகை வேந்ரது துன்பம், புலி முழக்கத்தைக் கேட்டு நடுங்கும் மான்களின் துன்பம் போன்றது. ஆட்டிற்கு மஞ்சளைப்பூசிப் பூவைச்சூட்டி அறுத்துக்கொன்று அதன் இரத்தத்தைத் தெளித்து, "தேவர்களே, உண்ணுங்கள்" என்று கூறும் இவ்வுலகத்தாரின் கொடுமை நரகத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு கொடியது. உடும்பு, வரால், வாளை முதலியவற்றை அறுக்கையில் அவை அழுத தீவினை, யாரிடம் செல்லும்? அறுப்பவரையும் ஏவினவரையும் அடையும் தீவினை வருத்துதலால் எத்தகைய காவலுள்ளவராயினும் வருத்தப் பெறுவர். முழு மூடர்கள், எருதுகளை ஏரில் பூட்டித் தார் கோலால் குத்தி ஓட்டி உழுவர். அவ்வெருது எழுந்து நடக்க முடியாமல் கீழே விழுந்து கிடந்து இறக்கும்.

வண்டியிழுத்துச் செல்லும் எருதுகள், வண்டி, நீரில் அழுந்தினால் தம் மூக்கை நிலத்தில் ஊன்றி முழந்தாளிட்டு இழுத்துப் பின்னர் வலிகெட்டு அங்கும் அழுகி இறக்கும். பாகர்களின் துன்பத்தால் சில யானைகள் இறக்கும். சிங்கத்தால் சில யானைகள் இறக்கும். தீயினால் வளைக்கப்பட்டுச் சில விலங்குகள் இறக்கும். உயிருள்ள சங்குகளை வளைகள் செய்வதற்கு மாந்தர் கொல்வர். முத்துக்கள் எடுப்பதற்கு சிப்பிகளைக் கொல்வர். மயிர்க்காகக் கவரிமானைக்கொல்வர். பரசமயத்தார் யானையின் தோலைப் போர்த்துக் கேடுற்றார். நன்மையைத் தருமென்றெண்ணி வேள்விகளிலும், விருந்திலும் விலங்குகளைக்கொன்றனர். மகளிர் பலரும், பேசவல்ல கிளி, நாகணவாய்ப் பறவை முதலிய



வூற்றைக் கூட்டில் அடைத்து வருத்துவர். அவை பெரும் பாவம். முனிவரை இகழ்பவரும், பிறரர்க்கு இட்டு உண்ணுதவரும், பரத்தையரும் விலங்காய்ப் பிறப்பர்.

மக்கட்கதித் துன்பம்

இனி மக்கட்கதித்துன்பத்தைக் கேள். இளைஞர், தமது மார்பில் வாசனைப் பொருளைப் பூசித் தம் அழகைக் கண்ணுடியில் பார்ப்பர். தம் அழகுமிகுதியைக் கண்டு மகிழ்வர். இளமைச் செவ்வியில் இளநங்கையரைப்புண்ரும் இளைஞரது துன்பத்தை என்னென்று சொல்வேன். புழுவும் புனலும் மலமும், நாற்றமும் நிறைந்த வயிற்றிலிருந்து தாம் தோன்றிய தன்மையை நினையாமலன்றோ தம்மை அவர் வியக்கின்ருர். மகளிர்மீது கொண்ட மயக்கத்தால், இளைஞர் அவர் பொருட்டு மார்பில் வேலையும் ஏற்றுக்கொள்வர். மகளிர்க்குப் பொருள் கொடுத்ததற்காகக் களவுசெய்து கழுவேற்றப்படுவர். யானையின் காலால் இடறப்பெறுவர். அத்துன்பத்தை நீ எண்ணிப்பார். கடலில் கப்பல் கவிழும் காலத்து மக்கள்படும் துன்பம் நரகத்தைக் காட்டிலும் கொடிது. என் பகைவர் நாட்டில் குடியிருக்கும் செல்வரைப்பார்த்து, நீர்தேடியபொருளை அரசனுக்குத்தாருங்கள் என்று சொல்ல, அவர்தராவிடின், பலவாறு தண்டிக்கப்படுவர், கையில் விலங்கிட்ப்பெறுவர். சேற்றில் நிறுத்தப்பெறுவர். முழங்கைகள் தேய்க்கப் பெறுவர். உடம்பென்னும் சோலையில் சேர்ந்த வியாதி என்னும் தீ அழகென்னும் பூ, வாடும்படி அச்சோலையைச் சுட்டுக்கொளுத்திவிட்டுப் போம். கூனர், குறளர், சிந்தீர் நோயாளர் முதலியோர் படும் துன்பம் நம்மால் சொல்லும் தகுதியுடையதன்று. மக்களுக்கு, விரும்பிய பொருளைப் பெருவிடின் துன்பம். அன்புடையவரைப் பிரிதல் துன்பம். மூப்பு வருதல் துன்பம். கல்வி கற்காமையால் இகழப்பெறுதல் முதலிய பலவும் துன்பம்.

தேவகதித் துன்பம்

இனி தேவகதித்துன்பத்தைக் கேள்: தேவர், கருவில் பிறவ்ார். அவரது கால்கள் பூமியில் படியா. அவர் சூடிய மாலை வாடா. அவர்கள் மனத்தால் நுகர்வதல்லாமல் கையால் நுகரார். காமத்தால் வருந்துவர், தம் வாழ்வும் நில்லாது என்று அவர் உணர்ந்து, "இப்பிறவியை வேண்டேம்" என்று அருகனை வணங்குவர். அந்திய காலத்தில், "உயிர் போவதற்கு இன்னும் பதினைந்து நாட்கள் உள்ளன' என்று அறிவித்ததற்கு அவர்கள் கண்கள் இமைக்கும் மாலைவாடும். தாம் நுகர்ந்த இன்பத்தை வெறுத்துப் பின் வருந்துவர். தாம் தேவராயிருந்தும் பிறதேவர்க்குக் கீழ் ஏவல் செய்து கோபிக்கப் பெறுதல் பெருந் துன்பம். அவர், பூமியில் வந்து மக்களாயும், விலங்காயும் பிறதலும் துன்பம். ஆதலால் எத்தகைய உடம்பை எடுத்தாலும் அது துன்பத்தையே தரும்.

நற்காட்சி

இனி, நற்காட்சியைக் கூறுவேன் கேள். அரசனே, அசோகமரத்தின் கீழ் சிம்மாசனத்தில் தேவர் சிறப்புச் செய்ய விளங்கும் எம்பெருமானுகிய அருகதேவனது பாதங்கள் என் தலையிடத்தன. உதயதரம், பிரீதி தரம், கலியாணதரம் என்னும் மூன்று மதிலைகளை உடையவர் அவரே. சந்திர்ர்தித்தியம், நித்திய விநோதம், சகல பாசனம் என்னும் முக்குடையையும் உடையவர் அவரே. நாகம், சுவர்க்கம், பூமி என்னும் மூவுலகும் உடையவர் அவரே. நற்காட்சி, நன் ஞானம், நல்லொழுக்கம் என்றும் இரத்தினத்திரயத்தை உடையவரும் அவரே. சகசாதிசயம், கர்மக்ஷயாசயம், தெய்வீகாதிசயம், என்னும் மூன்று அதிசயங்களையும் உடையவர் அவரே. அங்காகமம், பூர்வாகமம், பகு சுருதியாகமம் என்னும் மூன்று ஆகமங்களையும் உடையவர் அவரே. அனந்த குணங்களை உடையவர். அனந்த ஞானங்களை யுடையவர். எல்லாவற்றையும் ஒருங்கே தனக்கு உரிமையாக உடைய அருக தேவனே நம்மை அடிமையாக உடையார். அவர் பாதங்களைத் துதித்துத் தெளியத் தக்க பொருள்களாவன: சீவம், புற்கலம், தருமம், அதருமம், ஆகாசம் என்னும் ஐந்துகாலத்துடன் ஆறு. அசீவம், புண்ணியம், பாவம், ஆஸ்ரவம், சம்வரை, நிர்ச்சரை, பந்தம், மோக்ஷம், என்னும் ஒன்பது முதலியன. தமக்குரிய செயலின் பயனுகிய இருவினையின் பயனே இந்திரனும் குரங்கும் வேறுபாடில்லாமல் நுகர்வர். அதை உணர்ந்து இந்திரனை மகிழ்தலும்,குரங்கை இகழ்தலும் கூடாது. இருவினையின் தன்மை உணர்ந்தவர் அவ்வாறு செய்யார். அத்தகையவர் அங்காகமம் பன்னிரண்டையும் பூர்வாகமம் பதினன்கையும், பகு சுருதியாகமம் பதினறினையும் தெளிந்தவராவர். அறிவு மிக்கோரை விரும்புதல், வெறுப்பில்லாமை, மோட்சத்தில் கருத்துக் கொள்ளல், முனிவர்க்குச் செய்யும் பூசைக்கு எதிர் கொள்ளல், அழிந்தோரை ஆக்குதல், அறத்தைச் சொல்லுதல், அறிவிலாரைச் சேராதிருத்தல், கோபத்தை நீக்குதல், செருக்கை நீக்குதல், எல்லாச் சமயத்தார்க்கும் இனியராதல் இத்தன்மையை யுடையவர், பரமாகமமாகிய அங்காகமப் பொருளை உணர்ந்தவர். அத்தகையவர் விலங்கிற் சேரார், பெண்ணுய்ப் பிறவார். ஏழு நரகங்களையும் சேரார். இழிந்தவரான பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர் என்னும் தேவரைத் தீண்டார். ஏழு நரகம் என்று அறியாமற் கூறினேன், தீய நரகம் ஆறு மட்டுமே அதற்குக் காரணம். ஒரு வகையினர், நல்வினை நிறைந்த போக பூமியில் விலங்காய்ப் பிறப்பர்.

சீலம்

இனி சீலத்தைச் சொல்வேன் கேள்; எண் பத்து நான்கு நூருயிரம் குண விரதங்களும், பதினெண்ணுயிரம் சீலாசாரமும் பண்ணவரால் காக்கப்பட்டவை. அவற்றுள் சீலம் என்று கூறப்படுவன, வீரர் தரிக்கும் கவசம் போன்றவை. உள்ளே மயக்கத்தைத் தரும் ஐம்பொறியின் செருக்கையும் புறத்தே துன்பத்தைச் செய்யும் தீவினையையும் குறைப்பன. தலைமயிரைத் தம் கையால் பறித்து வலியைப் பொறுக்குஞ்சக்தி, பூமியை இரண்டு கூருக்கி ஒரு கூற்றைத் தாங்கும் வன்மை போன்றது. பிறன் மனைவியைக் கூடும் மாந்தர், பழிக்கப் பெறுவர், ஒருவர் தம்பலத்தை ஒருவர் உமிழ்ந்து தின்று மயங்குவர். இத்தகையவர் ஆண்மையுடையவர் அல்லர். தருமம் உடையவர்க்குச் சீலம் எவை யென்றால் தீய ஒழுக்கத்தைக் கெடுக்கவேண்டும், உணர்வைக் கெடுக்கும் கள், தசை, தேன் முதலியவற்றை நீக்க வேண்டும்.

தானம்

இனி தானத்தைச் சொல்வேன் கேள்: நல்ல நிலத்தில் வித்திய விதை போல் விளைந்து பின்பு செல்வத்தைப் பெருகக் கொடுப்பது தலையான தானம். பொல்லாத நிலத்தில் வித்திய விதை போல் கெட்டு, விளைந்து செல்வம் நிலைநில்லாது தோன்றி அழிவது இடையான தானம், ஒரு மயிர்க்கு ஒரு செத்தாகச் செத்திறுனும், வணங்கினும், ஊழ்வினைஎன்று உணர்ந்துஅவரை ஆக்கலும்அழித்தலும் நினையாதவர் முனிவர். அவரை எதிர் கொள்ளல், இடம் காட்டல், கால் கழுவல், அருச்சனை செய்தல், அவர் பாதத்தை வணங்கல், இனிய மொழி கூறுதல், மனம், வாக்கு காயம் தூய்மை உடையவராய் இருத்தல், பாவம் அகலுமாறு வேண்டுதல், உணவளித்தல், என்ற ஒன்பது வகையாய் உபசரித்துத் தானம் செய்தல் வேண்டும். யாவருக்கும் சோற்றை அள்ளிக் கொடுத்தல் இடையான தானம். இவ்வாறல்லாமல், விலங்கைக் கொன்று விருந்திட்டவர்க்கும் விருந்து உண்டவர்க்கும் விளையும் தீவினைப் பயன் இத்தன்மைய என்று கூறுதல் இயலா.

தானப்பயன்

இனி தானப்பயனைக் கூறுவேன் கேள்: மனைவியும் கணவனும் உள்ளம் ஒன்றிப் புண்ணியர்க்குச் செய்யும் தானத்தின் பயன் சிறந்தது. அவ்வாறு தானம் செய்த இருவரது உயிரும் தீவினை நீங்கிப், போகபூமியில் ஒரு வயிற்றிலே சேரும். பின்னர், பத்து மாதங்கள் கழிந்த பின் ஆண், பெண்ணுகிய இரட்டைக் குழந்தைகளாய்ப் பிறக்கும். பிறர் காக் காமலேயே வளர்ந்து நாற்பத்தொன்பது நாட்களில் உறுப்புக்களும், குணமும், கலையும் நிறைவு பெறும். இருவரும் தக்க பருவம் அடைவர். மழலை மொழியாளாகிய அப்பெண், பகலும் இரவும் இல்லாத கற்பக மரத்தின் நிழலில் சென்று காட்சிகளைக் கண்டு நிற்பாள். சிங்கம் போன்ற இளைஞனும் ஊழ்வினையால், கற்பக மரத்தை அடைந்து அவளைக் காண்பான். இருவர் உள்ளமும் காதலால் கலக்கும். உடனே இருவரும் மனமொன்றிக் கூடுவர் இன்பம் நுகர்ந்த பின் அந் நங்கை ஊடல் கொள்வாள். இளைஞன் அவளை வணங்கி ஊடலைத் தணிப்பான். பின்பு இருவரும் மகிழ்ந்து மாடத்தை அடைவர். காந்தருவமாகிய மணத்தைப் பெற்றும் மகிழ்வர். சோலையிற் சென்றும், வீணை வாசித்தும், நீர் விளையாடியும், இன்பம் நுகர்வர். அவனும் அவளும் தலைமையான தானத்தை முற் பிறவியில் செய்தமையால், தாம் விரும்பியவற்றைக் கற்பகம் அள்ளிக் கொடுப்ப நுகர்ந்து மகிழ்ந்து காலம் கழிப்பர். இடையாய தானம் செய்தவர், கரும பூமியில் பிறந்து செல்வத்தில் மயங்கிக் காலம் கழிப்பர். தீயவர்க்குத் தானம் செய்தவர், தீவுகளில் பிறந்து மக்களுடம்பையும், விலங்கின் முகத்தையும் பெற்றுக்கனியை உண்டு வாழ்வர்.

சீலப்பயன், காட்சிப் பயன்

இனி சீலப்பயனையும், காட்சிப் பயனையும் கேள்: சீலத்தை உடையவர் கற்பத்தில் தேவராவர். காட்சிப் பயனை அடைந்தவர் சக்கரவர்த்திகளாவர்.

மோட்சப்பயன்

இனி மோட்சப்பயனைக் கேள்: அருகன் அருளிய ஆகமப் பொருளில் மோட்சப் பயன் கூறப்பட்டுள்ளது. உண்மைப் பொருள் இது என உணர்தல் ஞானம், உணர்ந்த பொருளின் தன்மை இதுவெனத் தெளிதல் காட்சி. தெளிந்த பொருள் இரண்டையும் மனத்தில் நிலைபெறுத்திக் கொள்ளல் ஒழுக்கம். இம்மூன்று தன்மையாகிய தீயால் இருவினையாகிய மரம் எரிக்கப்படும். இருவினையும் உயிர்க்கிழவனை (ஆத்துமாவை) விட்டு நீங்கினுல் மோட்சம் எனப்படும். அதனுல் பெறும் பயன், அனந்த ஞானம், அனந்த தரிசனம், அனந்த வீரியம், அனந்த சுகம் என்ற அனந்த சதுஷ்டயங்கள் தாம். அறிவும், காட்சியும், வீரியமும், இன்பமும், அல்லாதனவும் வந்து சேர்தலால் மோட்ச உலகம் என்பது ஒன்று உண்டு. அது எல்லாராலும் அறியப்பட்டதே" என்று கூறி முடித்தான்.

அடுத்த வாரம் :—

அசோதரனும்

அன்னக் குஞ்சும்.

நவ நாகரீகம்

ஒரு புடவை

காசினி எழுதியது

'நேத்திக்கு நீ கிளப்புக்கு வந்திருந்தாயோ?' என்று நளினு தேவி பங்கஜத்தைக் கேட்டாள்.

'இல்லை; நீங்கள் போயிருந்தீர்களா?' என்று பங்கஜம் சற்றுக் குரலில் ஆச்சரியம் தொனிக்கப் பதில் சொன்னுள்.

'நாங்கள் எல்லாரும் போயிருந்தோம், 'உன்னையும் அழைத்துப் போகலாம்னு தான் நினைச்சேன். அதுக்குள் லேடி சின்னையாவின் பெண் கமலம் அவசரப் படுத்தினுள். அப்படியே போய் விட்டேன்!' என்று நான் சொன்னேன்.

'எல்லாரும் வந்திருந்தாளா? என் மாமியார் 'யாரும் வந்திருக்க மாட்டா; போவது சரியில்லை'என்று சொன்னு! நானும் சரீனு இருந்து விட்டேன்!' என்ருள் பங்கஜம்.

'வந்திருந்தா! நீ தான் இப்படி பயங்காளித்தனமாக வ்ராமல் இருந்தாய்!' என்று மாலினி சொன்னதும், பங்கஜம் முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

'ஏன்! நேத்திக்கு என்ன விசேஷம்?' என்று என் அத்தை கேட்டாள்.

'அதுதான் ஒரு வேளை அபாய அறிவிப்புச் சங்கு பிடிக்கும்படியான நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்ற வதந்தி இருந்ததா—!' என்று நளினு தேவி சொல்லிக்கொண்டிருக்கும் போதோ:—'அப்படிக்கேள்விப்பட்டுமா, நீங்கள் வெளியே போனேள்? உங்களுக்குத் துணிச்சல் ஜாஸ்தி தான்!' என்று என் அத்தை சட்டென்றுசொன்னது பங்கஜத்துக்கு ஒரு சமாதானமாக இருந்தது.

ஏதாவது இவர்கள் சண்டைபோடப்போருளே என்று நேத்திக்கு சரோஜா கட்டியிருந்த புடவை ரொம்பவும் நன்ருக இருந்ததில்லையா?' என்று நான் நளினுதேவியைக் கேட்டுப் பேச்சை மாற்றினேன்.

"என்ன மாதிரிப் புடவை?" என்று பங்கஜம் உடனேயே உற்சாகத்துடன் கேட்டாள்.

புடவை மிகவும் லேசான கஷாய வர்ணம். மெல்லிசான, உறுதியான, வழவழப்பான பட்டில் நெய்திருந்தது. இதில் உடல் முழுக்க, நெட்டிலிங்க ஒத்தை இலைகள் மாதிரியில், நீள, நீளமான இலைகள் ஆழ்ந்த பச்சைப்பட்டில் போட்டிருந்தன. இலைகளின் நரம்புகளுக்குப் பளிச்சென்று தங்க சரிகை போட்டிருந்தது. இதே மாதிரியில் சாய்வான இலைகள் போட்ட கரை. புடவை ரொம்பவும் நாசுக்காக இருந்தது. விலை நூறு ரூபாய்களுக்கு மேல் ஆச்சு என்று ஸரோஜா சொன்னுள்.

கொடுக்க வேண்டியதுதான். புடவை அவ்வளவு நன்ருக இருந்தது.

குமபகோணம அட்வகேட் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் குமாரன் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரிக்கும் திருச்சி ரயில்வே ஆபீஸ் ஸ்ரீ பி எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்கார் புத்ரி சௌ. ஸரோஜாவுக்கும் சமீபத்தில் புள்ளையாம் பேட்டையில் விவாகம் நடைபெற்றது.

சேம்பிலைக் கறி

கறல் இல்லாத சேம்பு இலைகளை எடுத்து, நடு நரம்புகளை லேசாகக் கிழித்து, அலம்பி வைத்துக் கொள்ள வேண்டும். நரம்பைக் கிழிக்கும் போது இலையைத் துண்டாகக் கிழித்துவிடக் கூடாது அரைக் கால் படி துவரம் பருப்பை ஊற வைத்து, இதற்கு வேண்டிய உப்பு, காரம், பெருங்காயம், கொஞ்சம் புளி சேர்த்து, அரைத்துக் கொள்ள வேண்டும். இதைச் சற்று தளர அரைத்துக் கொள்ள வேண்டும். இஷ்டமானுல் இந்த மொத்தையில் கொஞ்சம் கடுகையும் பொறித்துக் கொட்டிக் கலந்து கொள்ளலாம்.

சேம்பு இலைகளில் பெரிதாக ஒன்னை ஒரு தட்டின் மேல் வைத்து, மொத்தையில் கொஞ்சம் லேசாக அதன் மேல் தடவ வேண்டும். பிறகு இதை விடச் சற்று சிறிய இலையை அதன் மேல் போட்டு, இதன் மேல் கொஞ்சம் அறைத்த மாவைத் தடவ வேண்டும். இப்படி ஏமெட்டு இலைகள் அடுகீகலாம்: இதை லேசாகச் சுருட்டி வைக்க வேண்டும். மேற் சொன்ன பருபபு அளவு இவ்விதம் இரண்டு சுருள் தயாரிக்கப் போதுமானதாக இருக்கும். இந்தச் சுருள்களை வேட்டில் வைத்து வெந்து கொள்ள வேண்டும். பிறகு இதை உருண்டை உருண்டையாகக் கத்தியால் நறுக்கி, வதக்கிச் சேம்பு முடிச்சுக் கறி போல் உபயோகிக்கலாம். சுருளை அப்படி ரொட்டித் துண்டுகள் போல் நறுக்கி, கொஞ்சம் மைதா மாவை உப்புக் காரம் போட்டு கெட்டியாக கரைத்து, இந்தத் துண்டுகள் மேல் லேசாகத் தடவ வேண்டும். ஒரு புரை பிஸ்கோத்தைக் கொப்பரைத் துருவலில் துருவி இதன் மேல் லேசாகத் தூவ வேண்டும். தோசைக் கல்லை அடுப்பில் போட்டு, மட்டாக எண்ணை விட்டு, இதை இரண்டு பக்கமும் சிவக்கும் படிச் சுட வேண்டும். கட்லெட் மாதிரியில் ருசியாக இருக்கும்.

மதிப்புரை

தற்காலத் தமிழ் இலக்கியம்

[ஸ்ரீ ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது. விலை ரூபா 1-8-0: பிரசுரித்தவர்—நவயுகப் பிரசுராலயத்தார், 'சுதேசமித்திரன்' புத்தக சாலைகளில் கிடைக்கும்.]

'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்பது தமிழிலே தலை சிறந்த இலக்கிய ஆராய்ச்சி நூல். இலக்கிய ஆராய்ச்சி என்பது தற்காலத் தமிழிலே தோன்றிய புதியதொரு அம்சமாகும். முதன் முதலில் தமிழில் இலக்கிய ஆராய்ச்சி செய்து வெளியிட்ட பெரும் சிறப்பு சிறந்த வசன கர்த்தரும் சிறுகதை ஆசிரியருமான வ. வெ. சு. ஐயருக்கே உரியது. ஆசிரியர் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் தற்காலத் தமிழ் நூல்களை விரிவாகவும் நுட்பமாகவும் சிறந்த முறையில் ஆராய்ந்து தம் ஆராய்ச்சியின் பலனை கொள்கைகளையும் முடிவுகளையும் தற்கால ஆசிரியர்களைப்பற்றியதாரதம்மியங்களையும், தீர்ப்புக்களையும் இந்நூலில் விவரித்திருக்கிருர். இவ்வாராய்ச்சிக்கு அவசியமான முன்னுரையாக தமிழரின் கலை வளத்தைப் பற்றிச் சற்று விரிவான ஒரு கட்டுரையும் 'தற்கால நாகரிகமும் தமிழரும்' என்ற தலைப்புடன் சுருங்கிய கட்டுரை ஒன்றையும் ஆசிரியர் எழுதி உதவி இருக்கிருர். தமிழரின் இலக்கியச் செல்வத்தின் பழமையும் பெருமையும், தமிழ்க் கலைகளைச் சமயங்களும் சங்கங்களும், மன்னரும் மடாதிபதிகளும், ஆலயங்களும் ஆகமங்களும் எவ்வாறு ஆதரவளித்துக் காத்து வந்தனர் என்பதும், நாளடைவில் தமிழ்க் கலைகள் ஆதரவற்றத் தமிழர் வாழ்வில் ஏற்பட்ட தளர்ச்சியினுல் எவ்வாறு நசிக்கத் தொடங்கின என்பதும், தற்கால நாகரிகமும் அறிவும் தமிழரையும் தமிழ் இலக்கியங்களையும் எந்தெந்த முறைகளில் இயக்கி வருகின்றன என்பதும், சரித்திர பூர்வமாகவும் மிகுந்த திறமையுடனும் இம்முன்னுரைக் கட்டுரைகளில் சித்தரிக்கப்பெறுகின்றன.

தற்காலத் தமிழ் இலக்கியத்தைக் கவிதை, வசனம் என்ற இரு பெரும் தலைப்புகளில் ஆசிரியர் ஆராய்கிருர். கவிதைப் பகுதியில் 'மனேன்மணியம்' ஆசிரியரான சுந்தரம் பிள்ளையையும் தமிழ்க் கிறிஸ்தவக் கவிஞரான கிருஷ்ண பிள்ளையையும் பற்றிப் பேசிவிட்டு, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் முன் அணியில் நிரந்தரமான ஸ்தானம் பெற்றிருக்கும் சுப்பிரமணிய பாரதியாரின் புல நூல்களையும் ஆசிரியர் விரிவாக ஆராய்ந்திருக்கிருர். நம் அதிருஷ்டவசத்தால் இப்பொழுது நம்மிடையே வாழ்ந்து வரும் கவி தேசிக விநாயகம் பிள்ளையையும், தன் உண்மைக் கவித்துவ சக்தியை சமூக முன்னேற்றப் பிரசாரத்துக்கே அர்ப்பணம் செய்திருக்கும் பாரதி தாஸன் என்ற கனகசுப்புரத்தினத்தையும் ஆசிரியர் உரிய முறையிலே பாராட்டி இருக்கின்றனர். வசனபகுதியிலே தமிழ்க் கிறிஸ்தவப் பெரியாரான மயூரம் வேதநாயகம் பிள்ளையும், 'கமலாம்பாள் சரித்திரம்' என்னும் அற்புத நாவலைச் சிருஷ்டித்த ராஜமையரும் தமிழ் வசன நடைக்கு உயிரும் ஒளியும் சக்தியும் கொடுத்த வ. வெ. சு. ஐயரும் பாரதியும், சுத்தானந்த பாரதி, மகா மகோபாத்யாய, சாமிநதையர் முதலிய எழுத்தாளர்களும் ஆசிரியரால் தக்கபடி போற்றப்படுகின்றனர்.

முதலில் 1933–ம் வருஷத்தில் வெளிவந்த இந்த நூல் இப்பொழுது இரண்டாம் பதிப்பில் பெரிதும் திருத்தியும், புதுக்கியும், விரித்தும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்நூலில் ஆசிரியர் கூறும் மதிப்புரைகள் சிறிதும் நடுநிலைமை தவருதவை. கலைச் சொல்லாக்கம், பிற மொழிக் கலப்பு முதலிய மொழிப் பிரச்னைகளைப்பற்றி ஆசிரியர் மிகவும் நியாயமான அபிப்பிராயங்களும் முடிவுகளும் கொண்டிருக்குன்றனர். சிறந்த நிதானமும் தெளிவும், தைரியமும் இவ்வாராய்ச்சி நூலில் மிகப் பிரதானமான அம்சங்கள். இந்நூல் தமிழிலே இதுவரை வெளிவந்துள்ள இலக்கிய ஆராய்ச்சி நூல்களிலே மிகச் சிறந்தது. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நம்பிக்கையும் அக்கரையும் கொண்ட ஒவ்வொருவருக்கும் இப்புஸ்தகம் அவசியமானது. (திருச்சி ரேடியோ மூலம் ஸ்ரீ எ. என். மகாபூஷணம் செய்த விமர்சனம்)

டெபுடி அக்கவுண்டண்ட் ஜெனரலாயிருந்து காலஞ்சென்ற டி. கே. சின்மயாநந்தம் குமாரத்தி சௌ. லீலாவதிக்கும், கராச்சி, ராய்ட்டர்ஸ்ஸச் சேர்ந்த சிரஞ்சீவி கே. கோபாலன், எம். ஏ–க்கும் 15-7-42உ பாஸ்கரராஜபுரத்தில் விவாகம் நடைபெற்றது.

"வீணை மதனி" ★ ★

சிறு கதை

★

ஸ்ரீ எஸ். ராமச்சந்திரன்

சரளா வீணையை வாசித்துக் கொண்டிருந்தாள். ஆபீசிலிருந்து அலுப்புற்று திரும்பி வந்திருந்த எனக்கு அவள் வீணையை மீட்டிக் கொண்டு பாடின பாட்டு ரொம்ப இன்பமாக இருந்தது. கோட்டை கழற்றி மாட்டி விட்டு, பாட்டைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டேன்.

வீணையைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் மதனியைப் பற்றித்தான் ஞாபகம் வருகிறது. சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்த நான், என் அண்ணா வீட்டில் தான் வளர வேண்டியிருந்தது.

நான் முதல் முதலில் என் அண்ணா வீட்டுக்கு வருவதற்கு முன் என் மதனியைப்பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன். அவளுடன் தான் இனிமேல் இருக்க வேண்டும். அவள் நல்லவளோ கெட்டவளோ. வேளா வேளைக்கு சாப்பாடு போடுவாளோ மாட்டாளோ? எப்பப் பார்த்தாலும் திட்டிக் கொண்டு இருப்பாளோ என்னமோ? அடிப்பாளோ என்னமோ? என்றெல்லாம் என் மனது யோசனைக்கு இடங் கொடுத்துக் கொண்டிருந்தது.

ஆனால் என் மதனியை முதல் தடவை பார்த்த உடனேயே எனக்கு அவள் மேல் நல்ல எண்ணம் உண்டாகிவிட்டது. அவளுடைய சாந்தப் பார்வையும், புன்னகையும், எனக்கு ரொம்பவும் பிடித்தது. என் தாய் என்றே நான் அவளை நினைத்துக் கொண்டேன்.

அவளும் அப்படித்தான். என்னைப் பார்த்த உடன் என்னை வாரி எடுத்து முத்தமிட்டாள். அதன் பின் நாங்கள் ரொம்பவும் சிநேகமாகி விட்டோம். அவள் என்மேல் அன்பு வைக்க இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக நான் சிறு வயதில் பெற்றோர்களை இழந்தவன்; இரண்டாவதாக மதனிக்கு குழந்தைகள் கிடையாது. ஆகவே நான் வெகு சீக்கிரம் அவள் குழந்தையாகி விட்டேன்.

என் மதனி எனக்கு குளிப்பாட்டுவாள். சாதம் ஊட்டுவாள். ஹாஸ்யம் ததும்பும் பற்பல கதைகள் சொல்லுவாள். தெரியாத பாடங்களையெல்லாம் சொல்லிக் கொடுப்பாள். சாயந்திர நேரங்களில் என்னுடன் பல விதங்களில விளையாடுவாள்.

வீணை வாசிப்பதில் என் மன்னிக்கு நிகர் ஒருவரும் இல்லை. கேட்பதற்கு ரொம்பவும் நன்றாக இருக்கும். வீணையை மீட்டிக் கொண்டு, பாட்டு பாடும் பொழுது எல்லாம் நான் அவள் முன் போய் உட்கார்ந்து கொண்டு பாட்டை ரசிப்பேன். சில சமயங்களில் அவளுடைய பாட்டுகளில் மெய் மறந்து கல்லாய் சமைந்தே போவேன். அச் சமயங்களில் எல்லாம் என் மன்னிக்கு சந்தோஷம் அதிகமாகும். உற்சாகம் அதிகரிக்கும்; முன்னிலும் நன்றாகப் பாடுவாள்.

சில பாட்டுகளை எனக்குக் கற்றுக் கொடுத்தாள். அவைகளை யெல்லாம் நான் மிகவும் நன்றாகப் பாடுவேன், மன்னி அதைக் கேட்டு சந்தோஷிப்பாள். எனக்கு குரல் மிகவும் நன்றாகஇருந்தது என்றுசொல்லி மேலும் மேலும் கீர்த்தனைகளை யெல்லாம் சொல்லிக் கொடுத்து வந்தாள். நான் அவற்றை யெல்லாம் கற்றுக் கொண்ட பின், எனக்கு வீணை வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. மதனியை சொல்லிக் கொடுக்கும்படி கேட்டேன்.

"உனக்கு இன்னும் எட்டு வயது கூட நிரம்பவில்லை, நீ வீணை கற்றுக் கொள்வது கடினம்" என்று சொன்னாள். எனக்கு அது ஏமாற்றமாகத்தான் இருந்தது. ஆனாலும் மதனி பேச்சைத் தட்டி நான் எதுவும் செய்ய இஷ்டப்படவில்லை. அதுவும் மன்னி பல வருஷங்கள் சிக்ஷை கற்றுக் கொண்டவள் என்ற விஷயம் எனக்குத் தெரியும். ஆகவே அவளுக்கு அநுபவம் அதிகம் உண்டு என்று என் மனதிற்கு பட்டது.

ஓரிரண்டு வருடங்கள் ஓடிச் சென்றன. மன்னியைத் திரும்பவும் கேட்டேன். அவள் இச்சமயம் எனக்கு வீணை வாசிக்க சிக்ஷை கொடுக்கத் தயாராக இருந்தாள். ஆகவே தினமும் சாயந்திர நேரங்களில் எனக்குக் கற்றுக் கொடுத்து வந்தாள்.

* * * *

இதுவரையில் உருக்கமாக "தோடி"யில் பாட்டைப் பாடிக் கொண்டு இருந்த சரசா பாட்டை சட்டென்று நிறுத்தி விட்டு, "என்ன யோசிக்கரேள்" என்று கேட்டாள். திடுக்கிட்டு விழித்துக் கொண்டு "ஒன்றும் இல்லை; இன்னொரு பாட்டைப் பாடு" என்றேன். அவளும் வீணையை சுருதிகூட்டி பாட்டை ஆரம்பித்தாள். நான் முன்னால் யோசித்துக் கொண்டு இருந்து விட்டு நிறுத்திய சிந்தனைகளுக்கு அவள் பாட்டு சுருதி கூட்டுவது போல் இருந்தது. ஏனெனில் என் மனதிலிருந்து சிதறின சிந்தனைகளை மறக்க முடியவில்லை. சரசா "கல்யாணி"யில் பாட்டைப் பாட ஆரம்பித்ததும், என் மதனி மேல் இருந்த நினைவு அதிகமாயிற்று. மன்னிக்கு "கல்யாணி" ரொம்பவும் பிடிக்கும்.

* * * *

எனக்கு வீணை சொல்லிக் கொடுக்க ஆரம்பித்து சுமார் ஓர் இரண்டு வருடங்கள் சென்றிருக்கும். என் பள்ளிக்கூடத்தில் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடை பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தன. தலைமை உபாத்தியாயர் என்னைக் கூப்பிட்டார். நான் என்ன விஷயமென்று கேட்டேன். எனக்கு ஓரிரண்டு அடிகள் முன்னேறி, மதனியின் முன்னால் வந்து நின்று கொண்டார். மன்னியை முழித்து முழித்துப்பார்த்துக்கொண்டு நின்றார். மன்னிக்கு கதிகலங்கிப் போய்விட்டது. தான் செய்த குற்றம் என்னவென்று தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டு இருந்திருக்க வேண்டும். ஓரிரண்டு நிமிஷங்களில் கண்களில் நீர் ததும்பியவண்ணம் தேம்ப ஆரம்பித்தாள். நான் இக்காட்சிகளை யெல்லாம் கண்டு மலைத்துப்போய் நின்று கொண்டு இருந்தேன்.

"ஏண்டி...சிறுக்கி...ஏண்டி அவனை கெடுக்கறே?" என்றார்.

"யாரை?" என்று மன்னி கேட்டாள் இதுதான் மன்னி அண்ணாவை முதல் தரம் எதிர்த்தது.

"யாரையா? எல்லாம் என் தம்பியைத்தான்; அவனுக்கு பாட்டையும் கீட்டையும் சொல்லிக் கொடுக்கிறது. அவன் பாடம் படிக்கிறதுமில்லை ஒன்றும் இல்லை. பாட்டைப்பாடிக் கொண்டு காலத்தைக் கழிக்கிறான்...போராத குறைக்கு மேடைமேல் வேறு போய் பாடுகிறான்...அந்த ஹெட்மாஸ்டர் வேறே 'மதனி சொல்லிக் கொடுத்தது' என்று உளறுகிறான். இதெல்லாம் என்ன அக்கிரமம்?" என்று அடுக்கிக் கொண்டேபோனார். அவர் கோபம் அதிகமாயிற்று.

மதனி பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தாள். மேலும் மேலும் அண்ணாவுக்கு கோபம் அதிகரிக்கவே 'பூட்ஸ் காலால்' மதனியின் முகவாய்க் கட்டையில் ஒரு உதை கொடுத்தார். அவ்வளவு தான். அலறிக் கொண்டு தரையில் சாய்ந்தாள் மன்னி. அவளுக்கு நினைவு தப்பிவிட்டது. இன்னும் ஓரிரண்டு உதைகள் அவளுக்குக் கொடுத்துவிட்டு என் அண்ணா வெளியே போய்விட்டார். இது வரையில் நடந்தவைகளை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்ற எனக்கு, துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

"மதனி, மதனி!" என்று அலறிக்கொண்டு அவளிடம் ஓடினேன். அவள் பதில் சொல்லவில்லை. நினைவில்லாது இருந்தாள். ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்து அவளுடைய முகத்தில் தெளித்து விசிறியால் விசிறினேன். அவள் தலையை எடுத்து என் மடிமீது சாத்திக்கொண்டு உட்கார்ந்து இருந்தேன்.

சிறிது நேரம் கழித்து மதனிக்கு நினைவு வந்தது. என் முகத்தைப்பார்த்தாள் அவளுடைய பார்வையில் சோர்வும், சோகமும், அளவுகடந்து கலந்து இருந்தது. என் மனதுக்குள் குமுறிக்கொண்டிருந்த துக்கம், அடக்க முடியாதபடி ஆகிவிடவே, நான் வாய்விட்டு அழுது விட்டேன். என்னைக் கூடிய மட்டும் சைகைகளின் மூலம் தேற்றினாள். அவளால் பேச முடியவில்லை. முகவாய்க் கட்டை வீங்கியிருந்தது. அன்று இரவு சாப்பிட முடியவில்லை. ஜுரம் காய்ந்து கொண்டிருந்தது. படுக்கையில் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.



அமெரிக்கப் பருந்து பாய்ச்சல் விமானம்

அமெரிகக ராணுவத்துக்கு வந்துள்ள புதிய பருந்து பாய்ச்சல் விமானம். மணிககு 300 மைல் போகும். 1,700 குதிரை வேகமுள்ள என்ஜின் இதில அமைக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் விமானப் படையும் இது போன்ற விமானங்களை உபயோகிக்கிறது.

தூக்கத்தில் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தாள்.

* * * *

நான் வீணை வாசிக்கத் தெரிந்த விஷயம் அவருக்கு எப்படியோ தெரிந்திருக்க வேண்டும். வருடாந்திரக் கொண்டாட்டத்தின் போது கடவுள் வாழ்த்து நான் பாடவேண்டும் என்றும் வீணையுடன் வரவேண்டும் என்றும் ஹெட்மாஸ்டர் என்னிடம் சொன்னார். பிறகு எனக்கு வீணை வாசிக்க யார் கற்றுக் கொடுத்தது என்று கேட்டார் 'என் மதனிதான்' என்று கர்வத்துடன் பதில் சொன்னேன்

அன்று பள்ளியில் வருடாந்திரக் கொண்டாட்டம். ஊரிலுள்ள பிரமுகர்கள் எல்லாம் கூடியிருந்தார்கள். பள்ளிக்கூடப் பிள்ளைகள் எல்லாம் 'ஹோ' என்று சப்தம் போட்டுக் கொண்டு உட்கார்ந்து இருந்தார்கள். ஆவலுடன் நிகழ்ச்சிகளை கவனிக்கச் சித்தமாயிருந்தார்கள். கூட்டத்திற்கு என் அண்ணா கூட வந்திருந்தார். மேடை மீது வீணையுடன் உட்கார்ந்து கொண்டிருந்தேன். எல்லோரும் என்னை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். வெட்கம் பிடுங்கித் தின்றது. எழுந்து ஓடிப்போய் உட்கார்ந்து பார்ப்பவர்களில் ஒருவனாக நான் இருந்து விடலாமா என்று கூடத் தோன்றிற்று. ஆனால் என் மதனியின் வார்த்தைகள் எனக்கு ஞாபகத்திற்கு வந்தன. "நீ வெட்கம் இல்லாமல் நன்றாகப் பாட வேண்டும் சங்கோஜப்படப் படாது" என்ற வார்த்தைகள் என் காதில் தொனிப்பது போல் தோன்றிக்கொண்டிருந்தது.

தலைவர் உத்தரவு கொடுக்கவே, தலைமை உபாத்தியாயர் மேடை மீது எழுந்து நின்றார், "நிகழ்ச்சிக் குறிப்பில் முதல் அம்சம்—ராமுவின் பாட்டு" என்று படித்து விட்டு, என்னைச் சபைக்குச் சிறிது அறிமுகப் படுத்தினார். நான் நன்றாகப் பாடுபவன் என்றும், என் மதனி தான் எனக்கு சிக்ஷை அளித்தாள் என்றும் கூறினார். இவ் வார்த்தைகளைக் கூறும்போது நான் அண்ணாவின் முகத்தைக் கவனித்தேன். கண்கள் சிவந்து கோபப் பொறிகளுடன் விளங்கினார். எப்படியும் நான் என் பாட்டைச் சொல்லி முடித்தேன். 'பேஷ்' என்றும் சிறு பையன் நன்றாகப் பாடுகிறான் என்றும் பலவிதமாக புகழ்ந்தார்கள். பையன்கள் எல்லாம் கையைத் தட்டி ஆரவாரம் செய்தார்கள்.

கொண்டாட்டம் முடிந்ததும் வீடு திரும்பினேன். 'மதனி, மதனி' என்று கூவிக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தேன். தாழ்வாரத்தில் உட்கார்ந்து இருந்த அவ்ள் என்னை எப்படிடா பாடினாய் என்று கேட்டாள். நன்றாகத்தான் பாடினேன், மதனி ஹெட்மாஸ்டர் கூட என்னைப் புகழ்ந்தார். நீ தான் எனக்குச் சொல்லிக் கொடுத்ததாகக்கூடச் சொன்னார் என்றேன். நான் கடைசியில் சொன்ன அவள் விஷயம் மனதைத் தைத்திருக்க வேண்டும். வெட்கத்தால் அவ்ள் முகம் சிவந்தது.

இதற்குள் அண்ணாவும் கூட்டத்திலிருந்து வந்து விட்டார். அவருடைய முகத்தில் கோபக் குறிகள் காணப்பட்டன. அவருடைய நடையில் ஓர் வேகம் இருந்தது. அசாதாரணமாக ஏதோ நடக்கப் போகிறதென்று மட்டும் எனக்குத் தெரிந்தது. கோபத்துடன் அண்ணா பேசுவதற்கு வாய் எடுத்தார், ஆனால் அவர் வாயிலிருந்து வார்த்தைகள் ஒன்றும் கிளம்பவில்லை.

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அண்ணா அவளைக் கவனிப்பதாகக் காணோம். அவளோ அபாய நிலையில் இருந்ததாக என் மனதுக்கு பட்டது. வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்து காட்டலாம் என்றாலோ எனக்கு பயமாக இருந்தது. அண்ணா அதைக் காரணமாகக் கொண்டு இன்னும் ஏதாவது அட்டகாசங்களை செய்தால் என்ன செய்வது? என்றுதான் சந்தேகப்பட்டேன். இப்படியும் அப்படியுமாக இரண்டு மூன்று நாட்கள் சென்று விட்டன.

மதனிக்கு உடம்பு ரொம்ப ஜாஸ்தியாகி விட்டது. அவளைக் கண்டபோது எல்லாம் அண்ணா எரிந்து எரிந்து விழுந்தார். அவளுடைய நிலைமையைக் கண்டு மனம் இளகி பரிதாபப்படுவதற்குப் பதிலாக இவ்விதம் அவளை நடத்தினது ஆற முடியாதபடி என் மனதைப் புண்படுத்தி விட்டது. அண்ணா மேல் எனக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது 'இந்த தரித்திரம் பிடித்த சனியனை யார் வீட்டில் வைத்துக்கொள்வார்கள். நீ உங்க ஊருக்குத் துலைந்து போ. உனக்கு சிகிச்சை செய்துகொண்டு இருக்க இங்கே ஆள் இல்லை. என்று அடிக்கடி அவள் காதில் விழும்படி சொல்லிக்கொண்டிருந்தார். விஷத்தைக் கொடுத்து அவளை கொலை செய்வதற்குப் பதிலாக அவ் வார்த்தைகளைப் பிரயோகித்தார் போலும்!

அண்ணாவின் வார்த்தைகள் மதனியின் மனதில் கூரிய முட்கள் போல் தைத்திருக்க வேண்டும். அவள் ஊருக்குச் சென்று விடுவதாக உத்தேசித்து அண்ணாவிடம் சென்றாள். அண்ணாவுக்கு அதுவும் சந்தோஷமே. "சரி" என்று ஒப்புக்கொண்டார். எனக்கோ மதனி போய் விட்டால் உயிர் போனது போல்தான். அண்ணாவிடம், மதனியை அனுப்பவேண்டாம் என்று கூடியமட்டும் மன்றாடினேன். அவர் என் வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்கவில்லை. மதனியையும் ஊருக்குப் போகவேண்டாம் என்று கூடிய மட்டும் கெஞ்சிப் பார்த்தேன். ஆனால் அவளும் முடியாது என்று சொல்லி விட்டாள்.

இதன்பின் நான் செய்வதற்கு ஒன்றுமில்லை. உட்கார்ந்து கொண்டு அழுதேன். மதனி ஊருக்குப்போனால் திரும்பி வருவது சந்தேகம் என்று ஏதோ என் காதில் சொல்வது போல் இருந்தது. நானும் மதனியுடன் கூடச் செல்ல வேண்டும் என்றேன். ஆனால் அண்ணா என்னை அப்படியும் இப்படியும் மிரட்டி அடக்கி விட்டார். நானும் பெட்டிப் பாம்புபோல் அடங்கி விட்டேன்.

மதனி ஊருக்குப் புறப்பட வேண்டிய நாள் வந்தது. அவளுடைய ஊருக்குப் பக்கத்து வீட்டு பாட்டி செல்வதாக இருந்தது. அவளுடன் மதனியை அண்ணா சேர்த்து அனுப்பி விட்டார். அன்று ஸ்டேஷனுக்கு நானும் போயிருந்தேன். ரயில் வந்து, புறப்படச் சித்தமாயிற்று. மதனியின் கண்களில் நீர் துளித்துக்கொண்டு இருந்தது, என் விஷயமோ கேட்க வேண்டியதில்லை, நான் நன்றாக அழுதுகொண்டு இருந்தேன். கண்களில் நீர்சொரிந்துகொண்டு இருந்ததால் மதனியைச் சரியாகப் பார்க்கக்கூட முடிய வில்லை.

ரயிலும் புறப்பட்டது. மதனி "போய் விட்டு வருகிறேன். நீ கடிதம் போடு" என்றாள். "சரி" என்று தலை ஆட்டத் தான் முடிந்தது. பேச நா எழ வில்லை. இதன்பின் ஒவ்வொரு நாளும் தபால்காரனை சந்தித்து, கடிதம் இருக்கிறதா என்று விசாரிப்பேன். ஒரு கடிதம் வந்தது, அது மதனியின் தகப்பனார் எழுதியது. மதனியினால் கடிதம் எழுதமுடியாததால் தான் எழுதவில்லை என்றும் உடம்பு சிறிது குணப்பட்டதும் எழுதுவாளென்றும் கண்டிருந்தது. இன்னும் சில நாட்களுக்குப்பின் மற்றொரு கடிதம் வந்தது. அதில் மதனி இறந்துவிட்டாள் என்று இருந்தது.

என் மனதின் நிலைமையை விவரிக்க வேண்டிய அவசியமே இல்லை... உயிருக்கு உயிராக இருந்த மதனியே போனபின் எனக்கு என்ன தான் பிடிக்கும். சுருக்கமாகச்சொன்னால் படிப்பு அந்த வீடு, விளையாட்டு ஒன்றும் அடியோடு பிடிக்க வில்லை. பலதினங்கள் அழுது புலம்பினேன் ஆனால் பலன் என்ன?

மதனியின் வீணை ஒரு மூலையில் வைத்திருந்தது. அதைப்பார்த்ததும் துக்கம் நெஞ்சை அடைத்தது. அதைத் தூக்கி ஓர் மூலையில் போட்டுவிட்டேன். எனக்கு மதனி சொல்லிக் கொடுத்த பாட்டுகள் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக மறக்க முயன்றேன். அவையும் நாளுக்கு நாள் என்னிடமிருந்து என் மதனியைப்போல் சென்று விட்டன. ஆனால் பாட்டு வாடை மட்டும் மறக்க வில்லை.

* * * *

இத்துடன் சரசாவின் 'கலியாணி'ப் பாட்டு முடிந்தது. நானும் இருபது வருடங்களுக்கு முன் நடந்த சம்பவத்திலிருந்து விழித்து எழுந்தேன். என் மனைவிக்குக் கோபம் கோபமாக வந்தது 'என்னன்ன யோசனை, பாட்டுப் பாடுகிறபோது கூட இந்த யோசனை தான்; பாட்டில் ஏதாவது 'டேஸ்டு' (ருசி) இருந்தாதானே? நான் தான் உங்களுக்கு பாட்டில் ருசி ஏற்படுத்தணும் போலிருக்கு" என்றாள்.

"ஆமாம் பாட்டில் ருசியில்லாதிருப்பதற்கு காரணமாக நடந்த விஷயம் அவள் பிறப்பதற்கு முன் தானே நடந்தது? இவளுக்கு எப்படித் தெரியும்?" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.
ஷாப்புகளில் கிடைக்கும்.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன

"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம். இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும், பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாறாமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோலா "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2ஜதை தோடுகள் 2மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும். இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத்தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக்இனும்.

London Commercial Co.,

(EAB) Post Box 165. (S.M.M) LAHORE (India)

வித்வான் ஸ்ரீ சுப்பராமபாகவதர்

"நீலம்"

சங்கிதத்துக்கு என்னவோ நல்ல காலம் பிறந்திருக்கிறது. அதை விட கலா ரஸிகர்களுக்குத்தான் இன்னும் நல்ல யோகம் என்று சொல்ல வேண்டும். மூலை முடுக்களில் இருந்த பழம் பெரும் புள்ளிகளையெல்லாம் நாம் பார்க்க முடிகிறது. அவர்களது அபூர்வமான சங்கித ஞானம் எத்தகையது என்பதை அறிய சந்தர்ப்பம் கிட்டிவிட்டது. இந்த வருஷம் பாருங்கள்! எந்த நிமிஷத்திலே என்னநேருமோ என்று சென்னையில் எல்லோரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்! இந்தச்சமயத்திலும் சென்னையில் சங்கிதத் திருவிழாக்கள் நடக்கின்றன. கவலை தோய்ந்த மனத்திற்குச் சங்கிதம் சிறந்த மருந்து. எந்த வருஷத்தில் சங்கீத விழா நடந்தாலும் நடக்கா விட்டாலும் இந்த வருஷம் அதை நடத்துவது ரொம்பப் பொருத்தம். இந்த ஒரு காரியத்துக்காகவே ரஸிகர்கள் சங்கித வித்வத் சபையாருக்குக் கடமைப் பட்டிருக்கவேண்டும்.

இந்த வருஷம் நடந்த சங்கித மகா நாட்டுக்குத் தலைமை வகித்தவர் மிகச் சிறந்த கர்நாடக சங்கீத வித்வான். ஸ்வரத்தில் புலி; லய விஷயத்திலும் அப்படித்தான். அநேகர் கேட்டிருக்க மாட்டார்கள். இத்தனை நாள் இவர் எங்கிருந்தார்? ஏன் வெளி வரவில்லை? இந்த வருஷம் எப்படி இவரைத் தேடிப் பிடித்தார்கள்? மிகவும் சரியான கேள்விகள். ரஸிகர்களுக்குக் கிட்டிய பாக்யம் என்பதுதான் அதற்குப் பதில். சங்கீத சாஸ்திர லட்சணத்தில் சகல அம்சங்களும் பொருந்திய மழவராயனேந்தல் ஸ்ரீ சுப்பராம பாகவதரை இவ்வருஷம் தலைவராகத் தெரிந்தெடுத்தார்கள். இந்த முறையாவது அவரைத் தலைவராக்கினரே என்று சந்தோஷம் கொள்ள வேண்டுமேயன்றி ஏன் இத்தனை காலமாக அவரைக் கவுரவிக்கவில்லை என்று? கேட்க வேண்டிய அவசியமில்லை.

யார் இந்த மழவராயனேந்தல்?

மழவராய னேந்தல் என்பது சிவகங்கை ஜமீன் கிராமங்களில் ஒன்று. இந்த ஊரில் தான் ஸ்ரீமான் சுப்பராம பாகவதர் 1888-ம் வருஷத்தில் வித்வத் பரம்பரையில் தோன்றினர்.

ஸ்ரீ பாகவதரின், தாய் வயிற்றுப் பாட்டனார் ஸ்ரீ சிதம்பர பாரதியார் பிரபல வித்வான். அவர் தமிழில் அநேகம் பாட்டுக்களை இயற்றியிருக்கிறார். சரித்திரங்களாகவும், தனித் தனியாகவும் அநேகம் கிருதிகளையும் செய்திருக்கிறார். பெரிய புராணத்தைக் கீர்த்தனமாகப் பாடியவர் இவர் தான். அவற்றைப் பாடும்படி செய்ய வேண்டிய கடமை வித்வத் சபையினுடையது. பாட வேண்டிய கடமை வித்வான்களுடையது. ஸ்ரீ பாகவதரின் சங்கித ஞானம் தாய் வழியைச் சேர்ந்தது. கச்சேரிகள் செய்து தான் ஜீவனம் செய்யவேண்டுமென்ற அவசியமில்லாதபடி ஆண்டவன் அவருக்குக் கிருபை செய்திருக்கிறார். கச்சேரிகள் மூலம் பிராபல்யம் பெற முற்பட வில்லை.

உயர்ந்த ஞானம்

பிரபல வித்வான்கள் மட்டும் இவரது ஞானத்தின் பெருமையை உணர்ந்தனர். அவர்கள் ஸ்ரீ பாகவதரை வித்வான்கள் கூடியிருந்த சபையில் கச்சேரி செய்யச் செய்து அனுபவித்தார்கள். ராக ஆலாபனை செய்ய ஆரம்பித்தால் அதன் ஸ்வலட்சணங்களும், சாயைகளும், வெளிப்படும்படி வெகு விஸ்தாரமாகப் பாடுவார். கீர்த்தனைகளின் எடுப்பு, கிரவல், ஸ்வரம், தாளம் முதலிய அனைத்தும் மிக உயர்ந்தவை. பல்லவி வெகு விசேஷமானதாயிருக்கும். மகாநாட்டில் விவாதம் நடந்தபோது பாடியும் காட்டினர். மைசூர் மகாராஜா திருவாங்கூர் மகாராணி ஆகியோர் முன்பாகவும் இவர் கச்சேரிகள் செய்து புகழ் பெற்றிருக்கிறார்.

என் கவலை

"காலஞ் சென்ற புஷ்பவனமும், நானும் சேர்ந்தாப் போல் இருந்தவர்கள். நெருங்கிய நண்பர்கள். அவரது பாட்டைக் கேட்டு நான ஆனந்தித்தவன். காயக சிகாமணி முத்தையா பாகவதருக்கு என்னிடம் அலாதியாக ஒரு விச்வாசமுண்டு. அவருக்கும் எனக்கும் 30 வருஷப் பரிச்சயம். கர்நாடக சங்கீதம் க்ஷீணிக்காமல் அது வளர்ந்து பெருக வேண்டுமென்பது தான் என் கவலை. அதற்காக இன்னும் பலர் பாடு படுகிறார்கள். அதில் நானும் ஒருவனாக விருப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஆத்மானந்தத்துக்குச் சங்கிதம் சிறந்த சாதனம் அள்ளிக் கொட்ட வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதில்லை" என்று அவர் என்னிடம் தெரிவித்தார். ஸ்ரீ பாகவதரின் சங்கிதப் பற்றுக்கும், அவரது அடக்கத்துக்கும் இதைவிட வேறொன்றையும் குறிப்பிடத் தேவையில்லை.

தமிழ் வித்வான்களின் குடும்பத்தில் உதித்தமையால் ஸ்ரீ பாகவதருக்குத் தமிழபிமானம் அதிகமுண்டு. தெலுங்கு முதலான பாஷைகளில் இயற்றப்பட்ட பெரியார்களின் கீர்த்தனைகளைப் போலவே அந்தந்தச் சமயங்களுக்கு உகந்தவாறு ராகம், பாவம், லயம் முதலிய அம்சங்கள் நிறைந்த தமிழ் பாட்டுகளையும் வித்வான்கள் பாட வேண்டும் என்று அவர் கூறியிருக்கிறார்.

ஓர் யோசனை

கர்நாடக சங்கிதத்தின் தற்கால நிலைமையைப்பற்றியும் சீர் கேடடைய விடாமல் அப்பொக்கிஷத்தைக் காப்பதற்கான மார்க்கங்களையும் ஸ்ரீ பாகவதர் தமது தலைமைப் பிரசங்கத்தில் கூறினர். கர்நாடக சங்கீத வளர்ச்சிக்கு அவர் கீழ்க்கண்ட யோசனையைத் தெரிவித்திருக்கிறார். "பிரபல வித்வான்கள் பெரிய பட்டணங்களில் மாதம் ஒரு முறை கூட வேண்டும். கர்நாடக ஸங்கித முறையில் கச்சேரிகள் செய்யவேண்டும். கட்டணமில்லாமல் எல்லாரும் வந்து ரஸிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்பொழுது தற்போதைய சங்கிதத்திற்கும் கர்நாடக சங்கிதத்துக்கும் உள்ள வித்தியாசம் புலனாகும்."

இந்த யோசனையைப் பின்பற்றினல் அது கலைக்கும், கலாரஸிகர்களுக்கும் ஆற்றும் சிறந்த தொண்டாகும்.

அட்டைப் படம்
ஸ்ரீ சுப்பராம பாகவதர்.

சங்கித ரத்னாகரத்தின் அபிப்ராயம்

சங்கித ரத்னாகரம் அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்காரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். "பாகவதர்வாளைப்பற்றி எல்லாருமே இப்பொழுது திடீரென்று கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். உங்களுக்கும் அவருக்கும்ரொம்ப சிநேகமாமே? உங்கள் மூலம் அவரைப்பற்றிய தகவல் அறியலாமென்று வந்தேன்" என்றேன்.

"மழவராய னேந்தல் சுப்பராமய்யர் எனக்குப் பால்ய சிநேகிதர். அவருடைய கச்சேரிகள் பலவற்றை நான் கேட்டிருக்கிறேன். அவரும் அப்படித்தான். எங்கள் ஊரில் எந்த இடத்தில் நான் கச்சேரி செய்தாலும் கடைசி வரையில் கேட்டுவிட்டுத் தான் போவார். அவர் ஸ்வரம் பாட ஆரம்பித்தால் அடே

ஸங்கீத ரத்னாகரம்

அப்பா! அதைச் சொல்லி முடியாது. ராகத்தின் முழு லட்சணங்களும் துலங்கும் வண்ணம் ஸ்வரமாகப் பொழிந்துவிடுவார்! அது மட்டுமா? அதை ஏன் கேட்கிறீர்கள்? அபூர்வ ராகங்களைப் பாடினல் அலசித்தள்ளிவிடுவார். ஏன் வீணில் வளர்த்த வேண்டும்? சுப்பராம பாகவதரை "ஸ்வரப் பிரவாகம்" என்று சொல்லிவிடலாம். மாளவி, கதனகுதூகலம், ஸரஸ்வதி மனோஹரி, பங்காளா, பூர்ண சந்திரிகா இவை போன்ற ராகங்களை அவர் பாடிக் கேட்க வேண்டும்! அவ்வளவு அழகு!

ஸ்ரீ சுப்பராம பாகவதர் மட்டும் தீவிரமாகக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்திருந்தால் பல வித்வான்களுக்கு அவரது ஞானம் எத்தகையது என்பது தெரிய வந்திருக்கும். இந்தத் தடவை அவரை மகாநாட்டுத் தலைவராகத் தெரிந்தெடுத்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்றார்.

நான் துப்புக்கண்ட பிரதாபம்

★

ஸ்ரீ என். நாராயணன், பி. ஏ.

★

நேயர்களே, முதலில் உங்களை ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது.

உங்களில் யாராவது சமீபத்தில் இரண்டு நாய்க்குட்டிகளைக் காணமற் போக்கிவிட்டீர்களா? அப்படியானல், இதோ அவை இரண்டும், என் அறையில் பத்திரமாக விருக்கின்றன. எடுத்துக்கொண்டு போய்ச் சேருங்கள்! அதற்காக எனக்குக் காலணாகூட கொடுக்கவேண்டாம்!

எல்லாம் என் நண்பன் நரசிம்மனால்தான் வந்தது. அவன் பள்ளிக்கூடத்தில் படித்து வந்த நாளிலிருந்தே, பாட புஸ்தகங்களைப் படிக்காமல், துப்பறியும் நாவல்களைக் கரைத்துக் குடித்ததின் பயனாக, அவன் மூளையில் கோளாறு ஏற்பட்டு தானும் எப்படியாவது ஒரு துப்பறிபவனாகி விடுவதென்று தீர்மானித்து விட்டான். அதற்கு என்னையும் துணையாகச் சேரவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். எனக்கும்வேறு வேலையில்லாததால், இதிலாவது நம் அதிர்ஷ்டத்தைப் பார்த்து விடுவோமென்று எண்ணி, சரியென்று ஒப்புக் கொண்டேன். மறு நாளே என் வீட்டு வாசலில், கீழ்க் கண்ட விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டேன்.

"சிம்மம் அண்டு மூர்த்தி: துப்பறியும் நிபுணர்கள்.

ஆபீஸ் நேரம்:

காலை 10 மணி முதல்

மாலை 6 மணி வரை

காலையில் எழுந்திருக்கும் நிமிஷத்திலிருந்து, கண்ணயரும் வரை யார் வந்தாலும் பார்க்கத் தயாராக் விருந்தபோதிலும், தொழிலின் கௌரவத்தை உத்தேசித்து மேற்கண்டவாறு மணியைக் குறிப்பிட்டோம்!

விளம்பரப் பலகையைத் தொங்கவிட்டு இரண்டு நாட்கள் சென்றுவிட்டன. எங்கள் உதவியை நாடி, ஒரு ஈ, காக்கை கூட எட்டிப் பார்க்கவில்லை. ஆரம்பித்த தினம், நான் நரசிம்மனிடம், "நாம் மிகவும் அற்ப, சொற்பமான 'கேஸ்'களை எடுத்துக்கொண்டு, நம் காலத்தை வீணாக்கக் கூடாது. பெரிய, சிக்கலான கேஸ்களில் மட்டும் தான் கவனம் செலுத்த வேண்டும்' என்று சொன்னது என்னவோ வாஸ்தவந்தான்! ஆனல், இப்பொழுது இருந்த நிலைமையைப் பார்த்தால், ஒரு சின்னஞ்சிறு கேஸாவது, மாதிரிக்காக வென்றாவது வந்தால் போதுமென்று தோன்றியது.

முதல் கேஸில் வரும் பணத்தைக் கொண்டுதான், துப்பறியும் நிபுணனுக்கு மிகவும் அத்தியாவச்யமான வஸ்துகளான

(1) பாட்டரி விளக்கு

(2) பூதக்கண்ணாடி

(3) வேட்டை நாய்

(4) இன்னும்மற்ற சாமான்கள்.

வாங்குவதென்று நாங்கள் தீர்மானித்திருந்தோம், ஆனல். பரிதாபம்! இவ்வுலகின் பாபகிருத்தியங்களே க்ஷீணித்துப் போய் விட்டனவென்றே தோன்றியது.

இப்பரந்த பரதநாட்டில், ஒரு கொலையோ, கொள்ளையோ அல்லது கேவலம்ஒருசிறு திருட்டோ நடப்பதாகத் தெரியவில்லை! இருந்தால் எங்கள் உதவியை யாரேனும் நாடியிருக்க மாட்டார்களா? விதி. எங்களைச் சோதிப்பதென்றே தீர்மானித்து விட்டதா என்ன?

அதிர்ஷ்ட சக்கரம் எப்பொழுதும் சுழன்று கொண்டிருக்கிறதல்லவா? எங்களுக்கும் கடைசியில் ஒரு நாள் காலை 7-49க்கு அதிர்ஷ்டம் முகத்தில் அறைந்தாற் போல் அடித்தது.

எங்கள் வீட்டு வாசலில், விளம்பரப் பலகையை மேலும் கீழும் பார்த்துக்கொண்டே ஒரு ஆசாமி நின்றுகொண்டிருந்தார். ஓட்டமாய் ஓடி நானும் நரசிம்மனும் அவரை வரவேற்று, உபசரித்து,வந்த காரியமென்ன வென்பதை விசாரித்தோம்.

"எங்கே கொலை?" என்று ஆத்திரத்துடன் கேட்டான் நரசிம்மன்.

"கொலையா?... கொலையொன்றுமில்லை!" என்றார் வந்தவர்.

"பின் என்ன?... கொள்ளையா?..."

"இல்லை...இல்லை... கொள்ளையில்லை"

"பின் என்ன?...பெரிய திருட்டுக் கேஸா?"

"ஆம்...திருட்டு தான்..."

"அப்பொழுதே நினைத்தேன்! ...ஹூம்... எவ்வளவு ஆயிரம் ரூபாய்?...நகைகள் கூடவா?..." அவர் சிரித்தார்.

"இல்லை...இல்லை...ரூபாயுமல்ல!...நகையுமல்ல!...என் அருமையான நாய்க்குட்டி கெட்டுப் போய் விட்டது! இன்று காலையிலிருந்து தான் காணும்! அநேகமாய் நேற்று ராத்திரி எவனாவது திருடிக் கொண்டு போயிருப்பான் என்று தோன்றுகிறது... கண்டு பிடித்து, என்னிடம் சேர்ப்பித்தால், இருபது ரூபாய் இனம்!... அவ்வளவுதான்!... இதோ இந்த போட்டோவை வேண்டுமானல் வைத்துக்கொள்ளுங்கள்..." என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

இரண்டு பேரும் அவர் கொடுத்து விட்டுப் போன போட்டோவை மாற்றி மாற்றிப் பார்த்துக்கொண்டிருந்தோம். எங்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

கடைசியில், நரசிம்மன்,

"சரி நாம் இப்பொழுதே கிளம்பி, அதைத் தேடிக் கண்டு பிடிக்க வழி தேட வேண்டும்! என்ன?" என்றான்.

"நீ சொல்வது முற்றிலும் உண்மையான விஷயம். நாம் இப்பொழுது செய்ய வேண்டியது என்ன?" என்று கேட்டேன்

"நீ நேராகக் கிழக்கே திருவல்லிக்கேணி வரையில் செல். நான் இந்தப் பக்கம் மயிலாப்பூர் வரையில் போய் பார்க்கிறேன். அந்த நாய்க்குட்டி எங்கேயாவது தூங்கிக்கொண்டு கிடக்கும். எடுத்துக்கொண்டு போய், இருபது ரூபாயை வாங்கி வரலாம்!" என்றான் அவன்,

சரியென்று நான் கிளம்பினேன்.

* * *

திருவல்லிக்கேணியை நோக்கிப் புறப்பட்ட நான் வழியில் ஒரு சந்து, பொந்து, கடை, வீடு விடாமல் என் பார்வையைச் செலுத்திக்கொண்டு வந்தேன். வாலை ஆட்டிக்கொண்டு சென்ற எந்த ஜந்துவும் என் பார்வையிலிருந்து தப்பித்துக்கொண்டிருக்க முடியாது! ஆயினும், பிரயோசனமில்லை. போட்டோவில் காணப்பட்ட அங்கலட்சணங்களுள்ள நாய்க்குட்டி சென்னைப் பட்டணம் முழுவதிலும் தேடினுல்கூட அகப்படாது என்று தோன்றியது.

நான் மேற்கண்டவாறு நினைத்தது எவ்வளவு முட்டாள் தனம் என்பது பெரிய தெரு முனை வந்ததும் தெரிந்தது. ஏனென்றால், அந்த இடத்தில், சாட்சாத் என் கையிலிருந்த போட்டோவில் கண்டுள்ள அதே அடையாளங்களும், நிறமும், உருவமும் படைத்த ஒரு நாய்க்குட்டி நின்றுகொண்டிருந்தது.

"என் கலி தீர்க்கவந்த கருணை மூர்த்தியே!" என்று சொல்லி, ஆனந்தக் கண்ணீர் விட்டவனாய் அதை அப்படியே தாவி எடுத்துக்கொண்டு, வீட்டை நோக்கி விரைவாக ஓடி வந்தேன்! வரும பொழுதே, நரசிம்மனைப்பற்றி நினைவு வந்தது. பாவம், எங்கெல்லாம் வீணாகத் தேடி அலைந்து, திரிந்து, கஷ்டப்பட்டு மனோவேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறானோ! என்னைக் கண்டவுடன், அவன் எவ்வளவு சந்தோஷமும், பெருமையும் அடைவான்?

ஆனல், நான் வீட்டை யடைந்தவுடன் கண்ட காட்சி என்னைத் தூக்கி வாரிப் போட்டது! என் கையிலிருந்த நாய்க்குட்டியைப் போலவே சகல விதங்களிலும் ஒத்திருந்த ஒரு நாய்க்குட்டியை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் நரசிம்மன்!

"அடே! இதோ பார்! அந்த ஆசாமியின் நாய்க்குட்டி! மயிலாப்பூரில். ஒரு ஹோட்டல் வாசலில், எச்சில் இலையைத் தின்று கொண்டிருந்தது. எடுத்துக்கொண்டு ஓடி வந்தேன்!... ஏண்டா?...உன் கையில் என்ன?" என்று கேட்டான் நரசிம்மன்.

"நீ நாசமாய்ப் போக! இதோ பார், அவர் கெட்டுப் போக்கிய நாய்க்குட்டி! திருவல்லிக்கேணியிலிருந்தல்லவா கொண்டு வருகிறேன்!" என்றேன் நான் எரிச்சலுடன்.

நரசிம்மன் ஒரு நிமிஷம் யோசனை செய்தான். பிறகு, சாவதானமாக, "அப்படியென்றால், இந்த இரண்டு நாய்க்குட்டிகளில். எந்த நாய்க்குட்டி கெட்டுப் போனது?" என்றான்.

"எனக்கு எப்படித் தெரியும்?...சொந்தக்காரரைக் கேட்டால் தான் தெரியும்!"...வா, அவர் வீட்டுக்குச் சென்று அவரையே கேட்டு வந்து விடுவோம்! என்ன சொல்லுகிறாய்?......" என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே வாசலில், யாரோ, "ஸார், ஸார்!" என்று கூப்பிடும் சப்தம் கேட்டது.

"யாரது? உள்ளே வாருங்கள்!" என்றேன். ஒரு பையன் வந்து, ரொம்பவும் வணக்கத்துடன், "ஸார்! இன்று காலையில் உங்களிடம் ஒரு நாய்க்குட்டியைத் தேடசொன்னாரல்லவா?..."என்பதற்குள்,நானும், நரசிம்மனும் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்! என்ன?..." என்று கேட்டோம், "அந்த நாய்க் குட்டியை நீங்கள் தேட வேண்டாமென்றும், அது படுக்கைக்கு அடியிலேயே தூங்கிக்கொண்டிருந்தது என்றும் உங்களுக்கு சிரமம் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும் என்றும் சொல்லச் சொன்னார்!" என்று கூறி விட்டு அந்தப் பையன் போய் விட்டான்!

இரண்டு நாய்களையும் நான் 'தொப்'பென்று தூக்கித் தள்ளினேன். ஆனல், அவை என்னை விட்டு ஒழிந்தால் தானே?

இரண்டும் நான் எங்கு துரத்தி விட்டாலும், திரும்பித் திரும்பி என் அறைக்கே வந்துவிடுகின்றன! அவை செய்யும் உபத்திரவமோ கொஞ்ச நஞ்சமல்ல! துப்பறியும் தொழிலை நாங்கள் விட்டு விட்டோம். நாய்கள் போகவில்லை!

ரூ. 10,000 பெறுமான கடியாரங்கள் இலவசம்.

கலா டெல் (ரிஜிஸ்டர்ட்) உபயோகித்தால் பல கேசங்களும் கறுப்பாக மாறி, பிறகு எப்பொழுதுமே கறுப்பாக இருந்துவரும். எமது ஸ்வாமியால் அறிவிக்கப்பட்டது. மூளைக்குச் சிறந்த டானிக் கண் பார்வையை சீர்படுத்தி, மண்டையை குளிர்ச்சியாக வைத்திருக்கும். பாட்டில் விலை ரூ. 1-15-0. மூன்று பாட்டில்கள் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கை கடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும் அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும். குறிப்பு: சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)

(EAB)

பொய்யோ! மெய்யோ!!

கணக்குப்போடும் நாய்!

எல்லாப் பிராணிகளையும் விட நாய் ரொம்ப விச்வாசமுள்ளது; புத்திசாலித்தனமும் அதற்கு உண்டு. இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் அது கணக்குகளைப் போடுமென்றும், கூட்டல் கழித்தல்களையெல்லாம் சரிவரப் போட்டு விடை கொடுக்குமென்றும் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால் கணக்குப் போடும் நாய்கூட இருக்கிறதென்று இப்போது தெரிய வருகிறது. ஒரு ரூபாய்க்கு எத்தனை அணு? என்று கேட்டால் நாய் பதில் சொல்லுமா? சொல்லுகிறதாம். இந்த அதிசய நாயொன்று நியூ பிரன்ஸிவிக்கைச் சேர்ந்த மிஸ்டர் எஸ். பீர்ஸ் என்ற துரையிடம் இருக்கிறதாம்! 6 ரொட்டிகள் வேண்டும். கையிலிருப்பது 4 தான். இன்னும் எத்தனை வாங்கினால் 6 ஆகும்? என்று அந்தத் துரை கேட்டார். அவரது நாய் 2 முறை குரைத்து 'இரண்டு' என்று தெரிவிக்கிறதாம்.

சீட்டுக்கட்டில் 'டைமண்டு' வரிசையில் ஏதாவது ஒரு சீட்டை எடுத்துக் காட்டினால் அது பத்தாம் பந்தா? 8-ம் பந்தா? என்று கேட்டால் சீட்டிலுள்ள எண்ணிக்கைக்கு சரியாகக் குரைக்கிறதாம்! தான் சொன்ன கணக்கு சரியென்பதைத் தெரிவிக்க மேஜைமீது ஏறி அதே எண்ணுள்ள இன்னொரு ஜாதிச் சீட்டைக் கௌவுகிறதாம்.

எரிந்த தஸ்தாவேஜைப் படிக்கலாம்!

எரிந்து போன தஸ்தாவேஜுகளைப் படிக்க முடியுமா? இதற்கு ஸ்காட்லண்டு யார்டில் ஒரு வழி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இங்கிலாந்தில் அவ்வழியைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு கண்ணாடி பிளேட்மீது எரிந்துபோன தஸ்தாவேஜை வைக்க வேண்டும். அதில் 5% ஸில்வர் நைட்ரேட் (வெள்ளித் திராவகம்) திராவகத்தைத் தடவ வேண்டுமாம். 3 மணி நேரத்துக்குப் பின்பு எழுத்துக்களைத் தெளிவாகப்படிக்கலாமாம்!

பற்களைக் கொண்டே பல் வைத்தியம்!

விறகு வெட்டிக்குப்பிளவையானால் அக்கட்டையைக் கொண்டே அவனுக்குச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொல்வதுண்டு. ஆனால் அம்முறையைக் கையாண்டால் விறகு தான் மிஞ்சுமேயன்றி விறகு வெட்டியின் உயிர் மிஞ்சாது. ஆனால் பல் வைத்தியம் அப்படிப்பட்டதல்லவென்று தெரிகிறது. பல் கெட்டுப் போய் விட்டால் அதற்கு நூதன வைத்திய முறையொன்று தலைப்பட்டிருக்கிறதாம். பிராணிகளின் பற்களிலிருந்தும் அவற்றின் கடைவாயிலிருந்தும் ஒருமாத்திரை செய்கின்றனராம். அதை உட்கொண்டால் பற்கள் சீராகி விடுமாம். அதே மருந்தை இன்ஜெக்ஷனும் செய்திருக்கிறார்களாம். இம்முறை பயன் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

உலகத்திலேயே பெரிய முட்டை

உலகத்திலேயே பெரிய முட்டையொன்றிருக்கிறது. இது மடகாஸ்கரில் கண்டுபிடிக்கப்பட்டதாம். 30 அங்குல சுற்றளவுள்ள இம்முட்டையில் 14 படி ஜலம் பிடிக்கும்: இது நியூயார்க் மியூஸியத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

பேசும் "லைட் ஹவுஸ்"

கப்பல்கள் பாறையில் மோதி மூழ்காமல் பாதுகாப்பதற்குப் புதிதாக ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 7 வருஷப் பரீட்சைக்குப் பிறகு அம்முறை திறம்பட்ட வகையில் சீர்படுத்தப்பட்டிருக்கிறதாம். ஒரு தந்தையும் தனயனும் இதற்காகப் புதியதொரு சாதனத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். சார்லஸ் என்பவர் தந்தை. ஆலன் ஸ்டீவன்ஸன் என்பவர் பிள்ளை. இவர்கள் இருவரும் எடின்பர்க்கைச் சேர்ந்தவர்கள். லைட்ஹவுஸ்களைக் கட்டும் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பனி வருகிறதென்றால் உடனே தூரத்திலுள்ள கப்பலுக்கு லைட்ஹவுவிலிருந்து வழக்கமாகத் தகவல் போகும். 8-மைல் தூரத்தில் கப்பல் வந்ததும் அதிலுள்ள ரேடியோக் கருவி வேலை செய்ய ஆரம்பிக்கும். கரைக்கு 3 மைல் வந்தவுடன் கப்பலில் பேச்சுக் குரல் கேட்கும். 50 விநாடிகளுக்கொருதரம் 'லைட் ஹவுஸ்' பேசுகிறது என்ற சப்தம் கப்பலில் கேட்கும். பனி விழுந்திருப்பது பற்றிச் செய்தி வந்த பிறகு கப்பலுக்கும் லைட்ஹவுஸுக்குமுள்ள தூரம் எவ்வளவு என்பதை கப்பலிலுள்ள ரேடியோ அறிவிக்கும். இந்த புதிய ஸர்விஸ் 974 மீட்டர்களில் கேட்குமாம்.

6-வயதில் தாயான சிறுமி!

12 வயதிலிருந்து 17-வயதுக்குள் சாதாரணமாகப் பெண்களுக்குக் குழந்தை பிறக்கக் கூடுமென வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் உஷ்ணமான பிரதேசங்களிலும், தென் அமெரிக்காவிலும் 8-வயதிலேயே குழந்தை பிறந்து விடுகிறதாம். ஆனால் குளிர் மிகுந்த பகுதிகளில் 17, 18 வயதில் தான் குழந்தைகள் பிறக்கின்றன.

குழந்தைப் பருவத்திலேயே தாய்மார்களானவர்களின் பெயர்களும் அவர்கள் எந்த வயதில் தாயானார்கள் என்ற விவரமும் கீழே கொடுக்கப்படுகிறது:—

(1) ஜுவானிடா மெக்லிஷ் என்ற சிவப்பு இந்தியச் சிறுமிக்கு 11-வது வயதில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தை $9\frac{1}{2}$ பவுண்டு எடையிருந்ததாம். குழந்தையின் தந்தைக்கு அப்போது வயது 18.

(2) இதே போல மில்டிரட் மார்கன் என்ற மலேச்சாதிப் பெண்ணுக்கு 11-வது வயதில் ஒரு பிள்ளை பிறந்தது.

விஞ்ஞான சரிதையிலேயே ஒப்பற்ற சம்பவமொன்றை ரோஸ் வைலர் என்பவர் அறிவித்திருக்கிறார்.

8 வருஷத்துக்கு முன்னால் பெருவிலுள்ள ஒரு குடும்பத்தில் லின்னா மெடினா என்ற ஒரு பெண் பிறந்தது. அப்பெண் 6 வயதில் கருத்தரித்தாளாம்! விவரம் 1939-ம் வருஷம் வரை லின்னாவின் பெற்றோர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் கவனிக்கவுமில்லை.

ஒரு சிறந்த டாக்டர்தான் லின்னா கர்ப்பவதி என்பதைக் கண்டுபிடித்துச் சொன்னார்.

லிமா என்ற விடத்திலுள்ள பிரஸவ ஆஸ்பத்திரியில் 1939-ம் வருஷம் மே மாதத்தில் லின்னாவுக்கு $5\frac{1}{2}$-எடையுள்ள ஒரு பிள்ளை பிறந்தது. உலகத்திலுள்ள டாக்டர்கள் அனைவரும் இந்தச் சம்பவம் கண்டு திடுக்கிட்டார்கள். மனோ தத்துவ சாஸ்திரியான வைலர் மேற்படி பெண்ணின் குடும்பத்தவரைச் சோதனை செய்து நேரிடத் தகவல் பெறப் புறப்பட்டார்.

தோற்றத்தில் லின்னா சாதாரணக் குழந்தைகளைப் போலவே காணப்பட்டாள். தன் குழந்தைக்குப்பொம்மை வேண்டுமென்று கேட்டாளாம். அவளுக்குப் பிறந்த குழந்தை சாதாரணமாகவே இருந்தது.

கண்டு பிடித்தவர்கள் இவர்கள்தான்!

சென்ற வாரம், ஆகாய விமானம், சைக்கில், தீக்குச்சி ஆகியவற்றைக் கண்டு பிடித்தவர்கள் யார்? என்ற கேள்விகள் வெளி வந்திருந்தன. அதற்கான விடையைக் கீழே காணலாம்.

★

ஆகாய விமானம்

நீராவியின் உதவியைக்கொண்டு சுமார் 46 வருஷங்களுக்கு முன்பு முதன் முதலாக ஆகாய விமானமொன்று பறக்கவிடப்பட்டது. அதாவது 1896-ம் வருஷத்தில் லாங்கிலி என்ற ஐரோப்பியர் இவ் விமானத்தைக் கண்டுபிடித்தார். 1903-ம் வருஷத்தில் தான் பெட்ரோலைக் கொண்டு விமானம் பறக்கவிடப்பட்டது. இதை இரு ஐரோப்பியர்கள் கண்டு பிடித்தார்கள். வில்பர் என்பது ஒருவரின் பெயர். ஆர்வில்லி ரைட் என்பது மற்றொருவர் பெயர்.

★

சைக்கில்

டி ஸிவ்ராக் என்பவர் தான் 1690-ம் வருஷத்தில் முதன் முதலாக சைக்கிலைக் கண்டு பிடித்தவர்: பிறகு 1817-ம் வருஷத்தில் கார்ல் ட்ரெயிஸ் வான் என்பவர் அதை இன்னும் அபிவிருத்தியடைந்த சாதனமாகச் செய்தார். பிறகு பலவிதமான சைக்கில்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

★

தீக்குச்சி

'பாஸ்பரத்தை'க் கொண்டு தீக்குச்சிகள் செய்தவரின் பெயர் ஜான் வாக்கர் என்பதாகும். 1827-ம வருஷத்தில் தான் தீக்குச்சிகள் உற்பத்தி செய்வது ஆரம்பமாயிற்று.

★

சூடாமணி

★

"கஜமுகன்"

ஒரு ஊரில் சூடாமணி நவமணி என்ற இரண்டு சகோதரர்கள் மிகவும் ஒற்றுமையாக வசித்து வந்தார்கள். அவர்களில் நவமணி மூத்தவன், சூடாமணி இளையவன். அவர்கள் தாய் தந்தையர்களை இழந்தவர்கள். நவமணி சூடாமணியின் பேரில் மிகவும் அன்பாயிருந்தான்.

சில காலத்துக்குப்பின் நவமணிக்குக் கல்யாணம் ஆயிற்று. நவமணியின் மனைவியான கனகவல்லி ஒரு அடங்காப்பிடாரி. அவள் தன் புருஷனையும் சூடாமணியையும் படாத பாடு படுத்தினாள்.

சூடாமணி சிறுவனானதால் அவள் சொன்னபடியெல்லாம் செய்து வந்தான். இருந்தும் கனகவல்லி அவனுக்குச் சரியாகச் சாப்பாடு போடுவதில்லை. நல்ல உடைகள் கொடுப்பதில்லை. சூடாமணி, மாடுகளையும் மேய்க்கும்படியான நிலைமை ஏற்பட்டது.

ஒரு நாள் கனகவல்லி சூடாமணிக்குச் சாப்பாடு கூடப் போடாமல் மாடு மேய்த்துக்கொண்டு வரும்படி வெருட்டி அடித்தாள். சூடாமணி பாவம்! அழுது கொண்டே சென்றான். மாடுகளை மேயவிட்டுவிட்டு பசி மிகுதியால் துவண்டு களைப்பினால் தூங்கிவிட்டான். மாடுகள் பக்கத்திலிருந்த ஓர் குடியானவனது பயிரை மேய்ந்துவிட்டன. இதைக் கண்ட குடியானவன் கோபங்கொண்டு சூடாமணியை நன்றாக அடித்துவிட்டான். சூடாமணிக்குப் பசி மயக்கம் வேறு, அடியின் வலி வேறு. இரண்டும் சேர்ந்து அவனை மயங்கி விழும்படி செய்தன. அப்பொழுது அங்கு ஒரு தேவதை சூடாமணியின் நிலைமைக்கு இரங்கி அவனை மெதுவாகத் தட்டினாள். சூடாமணி மயக்கம் தெளிந்து எழுந்தான். தன்முன் ஒரு தேவதை நின்று கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷம் கொண்டு அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்.

"குழந்தாய்! எழுந்திரு. உனக்கு என்ன வேண்டும்? கேள். தருகிறேன்" என்று மிகவும் அன்புடன் கேட்டாள் தேவதை.

"தாயே! எனக்குப் பசி மிகவும் அதிகமாயிருக்கிறது"

"குழந்தாய்! இந்தா இப்புல்லாங்குழல். இதை ஊதினால் நான் வருவேன். அப்பொழுது உனக்கு வேண்டியதைத் தருகின்றேன்" என்று கூறி அத்தேவதைமறைந்தாள்.

சூடாமணிக்கு ஆனந்தம். சாப்பாடு வேண்டுமென்று நினைத்து புல்லாங்குழலை ஊதினான். சுவை மிக்க சாப்பாடு கிடைத்தது. அதைச் சாப்பிட்டுவிட்டு நல்ல உடைகள்வேண்டுமென்று நினைத்து மீண்டும் அப்புல்லாங்குழலை ஊதினான். நல்ல ஆடைகளை அத்தேவதை கொண்டு வந்து கொடுத்தாள். அவற்றை உடுத்துக்கொண்டுவீட்டிற்குச் சென்றதும் கனகவல்லிக்கு அதிக கோபமும், ஆச்சரியமும் உண்டாயிற்று. அவனது ஆடைகளைக் கிழித்து அவனை வெளியே துரத்திவிட்டாள். சிறுவனுக்குத் துக்கம் தாங்கவில்லை. அப்பொழுது அவனுக்கு புல்லாங்குழல் ஞாபகம் வந்தது. அதை எடுத்து ஊதினான். தேவதை வந்தாள். "ஏன் குழந்தாய் அழுகிறாய்?" என்று அவனைக் கேட்டாள்.

"தாயே! எனது மதனி என்னை வீட்டை விட்டுத் துரத்திவிட்டாள். நான் என்ன செய்வேன்? எங்கே போவது? என்றான்.

"சூடாமணி! கவலைப் படாதே. உன்னை மணிபுரம் என்னும் ஊரிலுள்ள மாரியம்மன் கோவிலில் கொண்டு போய் விடுகிறேன். அங்கு உனக்கு வேண்டிய சௌகரியங்களெல்லாம் இருக்கும்" என்று கூறி அவனை மணிபுரத்திலுள்ள மாரியம்மன் கோவிலில் கொண்டுபோய் விட்டாள்.

சூடாமணிக்கு அங்கே நல்ல சாப்பாடு கிடைத்தது. அங்கு நிம்மதியாக மாரியம்மனை பூஜித்து வந்தான். அவனது பக்தியைக் கண்டு மாரியம்மன் மிகவும் சந்தோஷம் அடைந்தாள்.

அவ்வூரில் சித்திரை மாதம் மாரியம்மனுக்கு உத்ஸவம் வெகு விமரிசையாக நடக்கும். அவ்வுத்ஸவத்திற்கு அரசன், அரசி, இளவரசி எல்லோரும் வருவார்கள். அவ்வருஷமும் அவ்விதமே நடந்தது. உத்ஸவ தினத்தன்று அம்மன் ஊர்வலம் வருவதுண்டு. ஊர்வலத்துடன் கூடவே அரசனும் செல்வான்.

ஊர்வலம் கிளம்பிற்று. சூடாமணியும் கூடப் போனான். கோபுரவாசலைத் தாண்டும்போது மிகவும் கூட்டமாய் இருந்தது. அதில் சூடாமணியின் புல்லாங்குழல் காணமற் போயிற்று. அது காணமற்போனதும் அவனது உயிரே போய்விட்ட மாதிரி இருந்தது. மாரியம்மனிடம் போய் முறையிட்டான். அரசனிடம் போய் முறையிட்டான். அரசன் அவனது நிலைமைக்கு மிகவும் வருந்தி தன் ஆட்களை விட்டு அதைத் தேடச் செய்தான்.

அச்சமயம். ஒரு வேலையாள் ஓடி வந்து "அரசே! இளவரசிக்குப் பைத்தியம் பிடித்து விட்டது" என்று கத்தினான். அரசன் பரபரப்புடன அந்தப் புரத்திற்கு ஓடினான். சூடாமணியின் புல்லாங்குழல் ராஜகுமாரியிடமிருந்தது. அதை வாங்கி அரசன் ஊதினான். தேவதை அவன் முன் வந்தாள். "என்ன வேண்டும், அரசே?" என்றாள்.

"தாயே! எனது மகளுக்கு எப்படி பைத்தியம் பிடித்தது? அதைத் தயவு செய்து தாங்கள் தெளிய வைக்க வேண்டும்," என்று அரசன் தேவதையை வேண்டிக் கொண்டான்.

"உன் மகள் அப்பையனுடைய புல்லாங்குழலை எடுத்து வந்து ஊதினாள். நான் அவள் முன் தோன்றினேன். என்னைக் கண்டு அலறி ஓடினாள். என்னை அவசியமாய் அழைத்ததினால் நான் கோபங் கொண்டு அவளை அவ்வாறு சபித்தேன்"

"தாயே! எப்படியாவது என் மீது இரங்கி என் மகளது பைத்தியத்தை நிவர்த்திக்க வேண்டும்"

"அந்தப் பையனைக் கூப்பிட்டு புல்லாங்குழலை அவனிடம் கொடு. அவன் அதை ஊதினால், நான் வந்து அவனுக்கு வேண்டியதைச் செய்கிறேன். பிறகு உனது மகளை அவனுக்கே மணம் முடித்து விடு."

அரசன் சூடாமணியை அழைத்து விவரத்தை அறிவித்து அவனிடம் புல்லாங்குழலைக் கொடுத்தான். சூடாமணி சந்தோஷம் அடைந்து புல்லாங்குழலை ஊதினான். தேவதை அவன் முன் தோன்றினாள்."

"தாயே! ராஜகுமாரிக்கு ஏற்பட்டுள்ள பைத்தியத்தை நிவர்த்திக்க வேண்டும்" என்று வேண்டினான்.

அரசகுமாரியின் பைத்தியமும் தெளிந்தது. சூடாமணிக்கும், இளவரசிக்கும் கல்யாணம் ஆயிற்று. சூடாமணி தன் புல்லாங்குழலைத் தன் இடுப்பிலேயே எப்பொழுதும் வைத்துக் கொண்டு சந்தோஷமாக ராஜகுமாரியுடன் வாழ்ந்து வந்தான்.



நீதிக் கதைகள்

உத்தாரணப் பரிசு

★

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.

தங்களுடைய பெட்டிகளின் மீது சீட்டுகளை ஒட்டி ஒரு கப்பல் உத்தியோகஸ்தனிடம் அவைகளை, குப்பனும் அவனுடைய மகனும் ஒப்புவித்து விட்டனர். ஆனால் அவர்கள் கப்பலுக்குச் சென்று பார்த்த போது, பெட்டிகள் காணப்படவில்லை. அவர்களுடைய அறையில் தேடிப் பார்த்தும் பெட்டிகள் காணப்படாததாலும், கப்பல் புறப்படுவதற்கு அரை மணி நேரம்தானிருந்தமையாலும், சாமான்களைக் கொண்டு வந்து சேர்க்கும் உத்தியோகஸ்தனை அவர்கள் தங்கள் பெட்டிகளைக் குறித்துக் கேட்டனர். அந்தப் பெட்டியைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கயிறுகளைப் பார்த்து அவைகள், மூட்டைகள் போடப்படும் அறையில் போடப்பட்டனவென்று அந்த உத்தியோகஸ்தன் கூறினான். "அவைகள் எங்கள் அறையிலிருக்க வேண்டியவை என்பதற்கு அடையாளமாக அவைகளின் மீது ஒட்டப்பட்டிருக்கும் சீட்டுகளை நீ பார்க்கவில்லையா?" என்று குப்பன் என்னும் தகப்பனார் கேட்டார். 'இல்லை. ஐயா! நாங்கள் கயிற்றைக் கவனித்து, அவைகளை மூட்டை யறையில் கொண்டு போய்ப் போட்டுவிட்டோம்" என்றான் உத்தியோகஸ்தன். அந்தப் பெட்டிகளைத் தூக்கிச் சென்ற கூலியை அவர்கள் கேட்டுப் பார்த்ததில், பெட்டிகள் பத்திரமாக இருக்கின்றனவென்றும், அவைகளை லண்டன் நகரத்திற்குச் சென்ற பிறகுதான் எடுக்கமுடியுமென்றும், அவர்களுக்குத் தெரிய வந்தது. அவர்களுக்கு வேண்டிய உடைகளெல்லாம் அந்தப் பெட்டிகளில் இருந்ததனால், தகப்பனாராகிய குப்பனுக்கு அதிக கோபம் வந்தது. உடனே அவர் நேராக மூட்டைகளைச் சேர்க்கும் உத்தியோகஸ்தனிடம் சென்று, 'அந்தப் பெட்டிகள் மூட்டைகள் போடப்படும் அறையிலாவது இருக்கின்றனவா?' என்று கேட்டார்.

'அதைக் குறித்து நீங்கள் சந்தேகப்படவேண்டியதில்லை. தினந்தோறும் வேண்டுமென்றால் அவைகள் உங்களிடம் அனுப்பப்படும்" என்று அத்த உத்தியோகஸ்தன் பதிலளித்தான். "மூட்டைகள் பதிவு செய்யப்பட்டிருக்கும் புத்தகத்தையாவது நான் பார்க்க முடியுமா?" என்று அவர் கேட்டார். "அந்தப் புத்தகம் கப்பலில் இல்லை. கரையில் இருக்கிறது" என்றான் உத்தியோகஸ்தன், 'நாம் கரைக்குச் சென்று அதைப் பார்க்க முடியுமா?" என்று அவர் கேட்டார். 'அது முடியாத் காரியம். நாம் கப்பலை விட்டுக் கீழே இறங்கினால், மறுபடியும் நம்மைக் கப்பலுக்குள் வர விடமாட்டார்கள்" என்று உத்தியோகஸ்தன் எடுத்துரைத்தான். 'ஏன்' என்று 'அவர் கேட்க, "அங்கே போய் வருவதற்குள் நாம் சில தொத்து வியாதிகளைக் கொண்டு வந்து சேர்த்து விட்டாலும் விடக் கூடும். அது தான் நம்மை வெளியே அனுப்பாததற்குக் காரணம்" என்று கப்பல் உத்தியோகஸ்தன் விளக்கிக் கூறினான். பிறகு கப்பலைச் சேர்ந்த சில வேலையாட்கள் போகக்கூடுமென்று அவர் அறிந்து கொண்டார். "தயவு செய்து, ஒருவனை அனுப்பி அந்தப் புத்தகத்தைப் பார்த்து விட்டு வரச் சொல்லுங்கள்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டார். முடிவில் ஒருவன் போய்ப் பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி விட்டுப் போனான். அவன் திரும்பி வந்து, "உங்களுடைய பெட்டிகள் மூட்டைகள் வைக்கப்படும் அறையில் வைக்கப்பட்டிருக்கின்றனவென்று அந்தப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது" என்று சொன்னான். "நீ செய்த உபகாரத்திற்கு அநேக வந்தனம். அந்தப் பெட்டிகளை நீ எனக்கு சும்மா நன்கொடையாகக் கொடுத்தது போல் நான் பாவிக்கிறேன்" என்று தகப்பனார் சொன்னார்.

மத்தியானம் ஒரு மணிக்கு கப்பல் புறப்பட்டது. தந்தையும் மகனும் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு தேநீர் பருகினர். சாயந்திரம் ஐந்து மணிக்கு தகப்பனார் மூட்டைகளை தணிக்கை பார்க்கும் உத்தியோகஸ்தனிடம் சென்று தனது பெட்டிகளைத் தன் அறைக்கு அனுப்பி விடும்படி கூறினார். அந்த உத்தியோகஸ்தன் தனது புத்தகத்தை புரட்டிப் பார்த்து மூட்டைகள் வைக்கப்படும் அறையில் அவருடைய பெட்டிகள் இல்லையென்று சொல்லி விட்டான். அவர் அதிக கவலைப்பட்டார். மூட்டைகள் வைக்கப்படும் அறையைத் தனக்குக் காட்டும்படி அவர் உத்தியோகஸ்தனைக் கேட்டார். 'நான் அந்த அறையைக் காட்ட முடியாததைக் குறித்து விசனிக்கிறேன். அந்த அறையை இன்றைக்கும் நாளைக்கும் பார்க்க முடியாது. இன்று 'துறைமுக நாள்' மேலும் மணியும் நாலாகி விட்டது. நாளைய தினமோ ஞாயிற்றுக்கிழமையாக விருக்கிறது என்று உத்தியோகஸ்தன் சமாதானம் கூறினான். 'ஆனால் எங்களுடைய உடைகளெல்லாம் அந்தப் பெட்டிகளுக்குள்ளிருக்கின்றனவே. இன்றிரவு போஜன உடையை நாங்கள் தரித்துக்கொள்வதற்கில்லை. இன்றிரவு படுக்கை உடையில்லாமல் நாங்கள்காலம் கழிக்கவேண்டும். நாளையதினம் முழுவதும் வேறு உடையில்லாமலே நாங்கள் இருக்கவேண்டும் என்று தகப்பனார் சொன்னார். அதற்கு நாங்கள் என்ன செய்வது? நாங்கள் சட்டப்படி நடந்தேயாகவேண்டும் என்றான் உத்தியோகஸ்தன். உங்களுடைய உத்தியோகஸ்தர்கள் செய்த தவறுதல்களுக்காகவும் உங்களுடைய சட்டங்களுக்காகவும் நாங்களல்லவோ இப்போது கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்று தகப்பனார் சொல்லி வருத்தப்பட்டார்.

இதில் ஒரு பிசகும் ஏற்படவில்லை. உங்களுடைய பெட்டி ஒன்று கூட மூட்டைகள் வைக்கப்படும் அறையில் இல்லை. கிறிஸ்துவப் பாதிரி டிரைகன் பர்க் என்பவர் ஏதாவது ஒரு வேளை உங்களுடைய சாமான்களைக் கொண்டு வந்திருப்பாரோ என்னமோ என்றான் உத்தியோகஸ்தன். 'இந்த டிரை கென்பர்க் என்பவர் யார்?' என்று அவர் கேட்டார். 'எனக்கென்ன தெரியும். உங்களுக்குத்தான் அவரைத் தெரிந்திருக்க வேண்டும்' என்று உத்தியோகஸ்தன் சொல்ல, தகப்பனார் தெரியாதென்று சொல்லி விட்டார். 'அதெப்படியோ இருக்கட்டும். என்னுடைய புத்தகத்தில் ஏதோ ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிறபடி, தங்களுடைய மூட்டைகள் கிறிஸ்துவப் பாதிரி டிரை கென்பர்க் என்பவரிடம் தானிருக்க வேண்டும்' என்று உத்தியோகஸ்தன் சொல்லி விட்டான். அதைக் கேட்டு அவர் சிறிது திருப்தியடைந்தார். பெட்டிகள் எங்கேயோ போய் விட்டனவென்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த அவருடைய மனது சிறிது சமாதானமடைந்தது.

'எனக்கு மூட்டைகள் வைக்கப்படும் அறையைத் திறந்து காட்டுங்கள். நான் ஏன் இத்தகைய குழப்பத்தில் அகப்பட்டுக் கொண்டு விழிக்க வேண்டும். நானே என்னுடைய பெட்டிகளைக் கொண்டு போய் ஏன் என் அறையில் வைத்துக் கொள்ளாமல் போனேன். இல்லையேல் நான் வேறொரு கப்பலிலாவது பிரயாணம் செய்யாமற் போனேனே' என்று குப்பன் தகப்பனார் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டே கப்பற் தலைவன் அங்கு வந்தான். நடந்த விஷயங்களைத் தலைவன் கேட்டறிந்து கொண்டு, மூட்டைகளைப் பாதுகாக்கும் உத்தியோகஸ்தனை உடனே கூட்டிக் கொண்டு வரச் சொன்னான்.

மூட்டைகள் வைக்கப்பட்டிருக்கும் அறையைத்திறந்து விடும்படி கப்பற் தலைவன் கட்டளையிட்டான். அறையின் கதவு திறக்கப்பட்டதும், தந்தையும் மகனும் உள்ளே ஓடோடியும் சென்று 'கண்டு பிடித்து விட்டோம்' என்று தங்களுடைய பெட்டிகளைக் கண்டு சந்தோஷத்துடன் உரக்கக் கூவினர். ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு அவர்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தனர். கப்பல் தலைவன் அவர்களை ஒரு நிமிஷம் பார்த்தான்; பரிதாபங் கொண்டான்; அவனுடைய கண்களில் ததும்பிய கண்ணீரை துடைத்துக் கொண்டான்.

'சீமான்களே, நாம் இங்கிருந்து போகலாம் வாருங்கள். தங்களுடைய பெட்டிகளைத் தங்கள் அறைக்கு அனுப்ப நான் ஏற்பாடு செய்கிறேன். நீங்கள் எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் உங்களுடைய பெட்டிகளைக் கண்டு பிடித்துவிட்டீர்கள்?' என்று கப்பல் தலைவன் அவர்களைக் கேட்டான். 'அவைகள் கட்டப்பட்டிருக்கும் கயிறுகளைக் கொண்டு நான் அடையாளம் கண்டுகொண்டேன்' என்று பெரியவர் பதிலளித்தார். 'இப்போது தங்களுக்கு சந்தோஷம் தானே' என்று கப்பல் தலைவன் கேட்டான். அதிலென்ன சந்தேகம். "கதவைத் திற" என்று சொன்ன மாத்திரத்தில் ஐசுவரியம் நிரம்பிய அறையின் கதவு திறக்கப்பட்டபோது அலிபாபா அடைந்த சந்தோஷத்திற்கு ஈடாக நான் சிறிது முன்பு அடைந்த சந்தோஷத்தைச் சொல்லலாம்' என்று பெரியவர் சொன்னார். சிறிது நேரத்திற்குள் பெட்டிகள் அவர்களுடைய அறைக்கு வந்து சேர்ந்தன. அவர்கள் அளவிலா சந்தோஷமடைந்தனர். அன்றிரவு, கப்பல் தலைவன் நீண்ட தாடியையும் கருணையுடன் கூடிய பார்வையையுமுடைய ஒரு பாதிரியை, தந்தையாகிய குப்பனுக்கும் அவனுடைய மகனுக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். அந்தப் பாதிரியின் பெயர் டிரெய்கென்பர்க் என்று சொன்னார். மறுநாள் அவர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, கப்பல் தலைவன் பெரிய குப்பனைப் பார்த்து, 'பாதிரி டிரெய்கென்பர்க்கைக் குறித்து தங்கள் அபிப்பிராயமென்ன?' என்று கேட்டான். 'அவர், தெய்வத் தன்மை வாய்ந்த நல்ல மனிதர். கருணை நிரம்பிய கிழவர். ஆனால் அவர் பெயரைச் சொல்லும் போதெல்லாம், காணமற் போய் கிடைத்த என்னுடைய பெட்டிகளின் ஞாபகம் எனக்கு வந்து வருத்தத்தை உண்டுபண்ணுகிறது' என்று பெரிய குப்பன் சொன்னார். 'அவர் பெயர் முக்தி மார்க்கத்தை ஞாபகப்படுத்துவதற்குப் பதிலாக உத்தாரணப் பரிசை ஞாபகப்படுத்துகிறது போல் தோன்றுகிறது' என்று கப்பல் தலைவன் பதிலளித்தான்.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'
நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாதமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். சாதவிடாய் தவறாமல் ஏற்படும்.
Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

நரையை ஒழியுங்கள்.
தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்முடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தங்கக் கறுப்பு (IVORY BLACK) சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.
APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER, Coimbatore.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ராம! கோதண்ட ராம! பாஹி
ராம! பட்டாபி ராம!

அனுபல்லவி

ஈ மஹினி பொம்மலாட ஜூசி
கம்மகானு ஒக மாடலேதா

சரணம்

1. பாலு காரு மோமு ஜூப நீகு
பாலு மாலிகேல ஸ்ரீபா!

2. ஆசிங்சி நாமேனு கரக கனி நீ-
வாசுக ராகயுண்டடனெறுக

3. மருலு கொண்டினி யிந்தாக யேபா-
மருலு சபிஞ்சிரோ லேக

4. செயிபட்டி நலுகுரிலோன யுரமு
ஜேர்ச பாத்ருடனு கான

5. ஜகமு ஒல்லனனு கொண்டி பு-
ஜக சயனு நம்மு கொண்டி

6. எதுட நிலிசி ப்ரோவு ராஜமுக!
ஸத்ய! பாலித த்யாக ராஜ!

II

ராம! கோதண்ட ராம!—கோதண்டம் என்னும் வில்லை கையில் ஏந்தி நிற்கும் ஸ்ரீராமா!
பட்டாபிராம்—பட்டாபிஷேக கோலத்துடன் விளங்கும்
பாஹி—என்னை ரக்ஷித்தருளுவாய் [ஸ்ரீ ராமா
ஈ மஹினி—இவ்வுலகில்
பொம்மலு ஆட ஜூசி—பொம்மைகள் போன்று விளங்கும் எங்கள் ஆட்டங்களைக் கண்டும்
கம்ம கானு—இனிமையாக
ஒக மாட லேதா—ஒரு வார்த்தையாவது நீ பேசக் கூடாதா
பாலு காரு மோமு ஜூப—பால் வடியும் உன் முகத்தைக்
நீகு—உனக்கு [காட்டியருள
பாலு மாலி கேல—இவ்வளவு அலக்ஷியம் ஏற்பட்டதேன்?
ஸ்ரீபா!—லட்சுமிபதியே!
ஆசிஞ்சி—உன்னையே விரும்பி
நாமேனு கரக—என் சரீரம் உருக
கனி—அதைக் கண்டும்
நீவு ஆசுக—நீ சீக்கிரமாக
ராக யுண்டுடன் எருக—வராமல் இருக்கும் காரணத்தை அறியேன்
மருலு கொண்டினி—உன்னிடம் மோஹம் கொண்டேன்
இந்தாக—இது வரை
ஏபா மருலு—எந்த பாபி மனுஷ்யர்கள்
சபிஞ்சிரோ—சாபமிட்டார்களோ!
லேக—இல்லாவிட்டால் (ஏது காரணமோ உன் தரிசனம் எனக்குக் கிடைக்க வில்லை)
செயிபட்டி—என் கையைப் பிடித்து
நலுகுரிலோன—நாலு பேருக்கு மத்தியில்
உரமுஜேர்ச்ச—உன்மார்போடு அணைத்துக் கொள்ள
பாத்ருடனு கான—நான் தகுதி உள்ளவனாக உனக்குத் தோன்றவில்லையா?
ஜகமு ஒல்லனு அனுகொண்டி—உலகம் உண்மையானதல்ல என்ற தத்வத்தை உணர்ந்தேன்
புஜக சயனு—சேஷசயனனான உன்னையே
நம்முகொண்டி—உறுதியாக நம்பினேன்.
ராஜமுக!—சந்திரன் போன்ற அழகிய முகத்தை உடையவனே! [வனே!
ஸத்ய—கருணாமூர்த்தியே!
பாலித த்யாகராஜ!—த்யாகராஜனை ரக்ஷித்தவனே!
எதுட நிலசிப் ப்ரோவு—என் எதிரில் வந்து எனக்குக் காட்சியளித்து ரக்ஷித்தருளுவாய்.

III

இக்கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் தான் ஸ்ரீராமனுடைய தரிசனம் கிடைக்கப் பெறாது வருந்தும் நிலைமையை முறையிட்டுக் கொண்டு தனக்கு எவ்விதமாயினும் தரிசனம் அளித்தருளுமாறு வேண்டிக் கொள்கிறார்.

ஈமஹினி:—ஈஸ்வரஸ் ஸர்வ பூதானும் ஹ்ருத் தேசே அர்ஜுன திஷ்டதி | ப்ராமயன் சர்வ பூதானி யந்த்ராரூடானி மாயய.||

என்ற கீதாஸ்லோகத்தில் (கீதை 18-வது அத்யாயம் 61-வது ஸ்லோகம்) பகவான் சமஸ்த ஜீவகோடிகளிலும் வியாபித்து அவைகளை ஆட்டி வைக்கிறார் என்ற கருத்து காண்கிறது. பொம்மைகள் போன்று ஜீவகோடிகளை ஆட்டி வைத்து வேடிக்கை பார்த்து கொண்டிருக்கும் பகவான் ஒரு வார்த்தையாவது அவர்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் சொல்லக் கூடாதா வென்ற அபிப்பிராயத்துடன் இங்கு தெரிவித்துள்ளார் போலும்.

மருலு:—ஸ்வாமிகள் ஸ்ரீராமனைப் பதியாக எண்ணி தான் பத்னியின் பாவம் கொண்டு துதிக்கிறார்.

வினராதா நாமனவி, தனியுனி ப்ரோவ (சரணம்) 'எந்துகி சலமு' முதலான கீர்த்தனங்களிலும் இது போன்றே பிரார்த்தித்துள்ளார்.

ஜகமு ஒல்லனு:—குலசேகரப் பெருமான் அருளிச் செய்த 3-வது திருமொழி.

'மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும் இவ்
வையந்தன்னொடும் கூடுவதில்லையான்
ஐயனே! அரங்கா வென்றழைக்கின்றேன்
மையல் கொண்டொழிந்தே னென்றன் மாலுக்கே' என்ற

பாசுரத்தில் கூறப்பட்டுள்ளபடியே ஸ்வாமிகளும் தெரிவித்துள்ளார்.

IV

ராகம் கரஹரப்ரியா — மிச்ரசாபு தாளம்

(22-வது மேள ராகம்.)

பல்லவி

;	பா	பா	பா	தநி	ஸ்	ஸ்நி	ரிஸ்
	ரா	ம	கோ	தண் .	ட	ரா .	ம .
நி	தப	மப	பா	மக	ரி	ஸரி	கம
பா	.	ஹி .	.	. .	.	. .	. .
பா	,	பா	மப	நித	ப	மக	ரிஸ
ரா		ம	பட் .	டா .	பி	ரா .	ம .
ரிக	ம	பதநித	பமகரி	ஸா	,	; ;	
பா	.	. . . .	. . .	ஹி	.		

அனுபல்லவி

கரி	க	மப	தநி	ப் .	தநி	ஸ்ரிக்ரி	ஸ்ா
ஈ .	ம	ஹினி	பொமம	லா .	ட	ஜூ . . .	சி
ஸ்ரிக்ரி	க்ம்	கரிஸ்நி	தநிபா	தாஸ்நிதநி		பாமக	ரிகமா
கம் .	ம .	கா . .	னு . ஒ	க	மா . . .	டலே .	. . தா

(சரணங்களை அனுபல்லவி போன்றே பாடவும்.)

வைரமும் வஞ்சமும்

1

கிழக்கு ஆப்பிரிக்காவில் பிரிட்டனது குடியேற்ற சாம்ராஜ்யத்தைச் சேர்ந்த ஒரு தீவின் கவர்னராய் உத்தியோகம் வகித்த ஸர் ராபர்ட் கில்பர்ட் திறமையும் அனுபவமும் பெற்றவர். அதனால்தான் அவர் அங்கே நீண்ட காலமாய் கவர்னர் பதவியை வகிக்கும்படி சீமையிலுள்ள அதிகாரிகள் விரும்பினர்.

புதிதாய் பிரிட்டனிலிருந்து அந்த தீவின் போலீஸ் இலாகாவின் தலைமை பதவியை ஒப்புக்கொள்ள வந்த காப்டன் ஜாக்ஸன் என்பவனுக்கு கவர்னர் கூறிய முதல் புத்திமதி இது தான். "இது லண்டனன்று, அங்கே அமுலிலிருக்கும் சட்ட திட்டங்களும் முறைகளும் இங்கே பயன் பெறும் என்று நினைக்காதே. எந்த காரியத்தையும் அவசரப்பட்டுக் கொண்டு செய்யாதே. நிதான புத்தியை எந்த விஷயத்திலும் உபயோகப்படுத்த வேண்டும் என்பதை மறந்து விடாதே."

ஜாக்ஸன் போலீஸ் நிர்வாகத்தைக் கைக் கொண்ட சில தினங்களுக்குப் பின்னர் நீண்ட கடல் யாத்திரை செய்துகொண்டிருந்த ஒரு ஜெர்மன் கப்பல்—அது ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்தது—அந்த தீவுக்கு வந்தது. முறைப்படி அதன் தலைவனை கவர்னர் வரவேற்று உபசரித்து விருந்து நடத்தினன். ஆங்கிலம் தெரியாத அந்த ஜெர்மன் காப்டனும் ஜெர்மன் பாஷையில் சம்பாஷிக்க வல்லாத ஆங்கில கவர்னருக்கும் இடையே துவிபாஷியாய் இருந்தவன் ஆர்தர் மாட் என்றவன். அவன் பல இடங்கள் சுற்றி விட்டு அந்த தீவில் குடியேறியவன்.

விருந்தின் பொழுது பிரஸன்னமாயிருந்தவர்களில் பீச் தம்பதிகளை குறிப்பிட வேண்டியது அவசியம். ஸிஸில் பீச் என்பவனுக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். அவன் பல வருடங்களாய் அந்த தீவிலேயே வசித்து வருபவன். ஊருக்கு வெளியே ஒதுப்புறமாயுள்ள ஒரு அழகிய தோட்டி வீட்டில் அவன் வசித்து வந்தான். அவன் மனைவி கிரிஸ்டிக்கு வயது முப்பதுதான் இருக்கும். அவள் தென்னமெரிக்காவிலிருந்து வந்தவள். உலகம் சுற்றும் ஒரு நாடககோஷ்டியைச் சேர்ந்த அவள் நாடோடி வாழ்க்கையில் அலுப்புற்று சிசிலை மணந்து அவனுடன் அந்த தீவில் வசிக்கலானள். ஆனல் அவர்கள் வாழ்க்கை இனிது நடைபெறவில்லை. கணவனுக்கும் மனைவிக்கும் அடிக்கடி சண்டையும் சச்சரவுமே நிகழ்வது சகஜமாயின. அவர்களுடன் நெருங்கிப் பழகின ஆர்தர்மாட் அவற்றை விலக்க பிரயாசை எடுத்துக்கொள்ளுவான். அதனல் கணவனுக்கும் மனைவிக்கும் அவன்மீது நல்ல மதிப்பு இருந்ததில் யாதொரு வியப்பும் இல்லை.

2

விருந்துக்கு மறுநாள் ஜெர்மன் கப்பல் தலைவன் தீவில் உள்ள காட்டில் வேட்டையாட விரும்பினன். அதற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யும்படி கவர்னர் உத்தரவிட்டான். ஹிட்லரின் ஆதிக்கமும் நாஜிக்களது செல்வாக்கும் ஓங்கி நின்ற காலம் அது. ஆதலால் ஜெர்மன் கடற்படையைச் சேர்ந்த அந்த கப்பல் தலைவனுக்கு ஆங்கில கவர்னர் மரியாதைகள் செய்தது ஒரு விந்தையாகுமா?

கப்பல் தலைவனுக்குத் துணையாக ஆர்தர்மாட் அனுப்பப்பட்டான். மாட்டின் மோட்டாரில் இருவரும் புறப்பட்டனர். வேட்டைக்கு தேவையான ஆயுதங்கள் கொடுக்கப்பட்டன. காட்டிலாகா அதிகாரிக்கு அவர்களது வருகை முன்னதாகவே அறிவிக்கப்பட்டது.

இரவே அவர்கள் திரும்ப வேண்டியது. ஆனல் அவர்கள் காட்டிலிருந்து வரவில்லை. மறுநாள் காலையில் தான் அவர்கள் மோட்டாரில் வந்து இறங்கினர்கள்.

கவர்னரது மாளிகையை அவர்கள் அடைந்தபொழுது

> ## உளவாளிக் கதை
>
> ★
>
> "நியாயவாதி"

கவர்னரும் போலீஸ் இலாகா அதிபதி ஜாக்ஸனும் ஏதோ ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்து கொண்டிருந்தவர்களைப் போல் தோன்றினர். ஜெர்மானியனைப் பார்த்தவுடன் கவர்னர் ஜாக்ஸனை நோக்கி, "நல்லதை இதைப்பற்றி பிந்தி பேசிக் கொள்வோம். நீ போய் விட்டு வா. அவசரப்பட்டு எதையும் செய்யாதே" என்ருன்.

"என்ன விசேஷம்?" என்று கேட்டான் மாட்.

"பிரம்மாண்டமான சமாசாரம் ஒன்றும் இல்லை. ஏதோ ஒரு கொலை நிகழ்ந்துவிட்டதாம்." என்ருன் கவர்னர்.

பிரயாணத்துக்கு சித்தமாயிருந்த தனது கப்பலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த ஜெர்மானியனை உபசரிப்பதிலேயே கவர்னரின் கவனம் சென்றது. வேறு எந்த விஷயத்தையும் அவனுல் கவனிக்க இயலவில்லை.

ஜாக்ஸன் அவனை மறுபடி சந்தித்தபொழுது அவன் தனிமையாய இருந்தான். அவனைக் கண்டதும் அவன் ஒரு ஆஸனத்தைக் காட்டி "ஜாக்ஸன் உட்கார். "இனி சாவகாசமாய் பேசலாம். ஜெர்மன்கப்பல் புறப்பட்டுப் போய் விட்டது. அதற்கும் அதன் தலைவனுக்கும் மரியாதை காட்டாவிடில் வீண் பொல்லாப்பு வந்து சேரும். அதனுல் தான் நான் உன்னிடம் பராமுகம் கொண்டவன் போல் இருந்தேன். இனி விஷயத்தை நன்ருய் கவனிப்போம். இந்த மனிதன் சிசில்லீச் எங்கே இறந்து கிடந்தான்" என வினவினன்.

ஜாக்ஸன், "அவனது தோட்டத்தில் ஒரு மூலையில் அவன் பிணமாய் கிடந்தான். அவன் பக்கத்தில் அவன் கைத் துப்பாக்கி கிடந்தது. நேற்று நள்ளிரவுக்குப் பின் அவன் இறந்திருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. துப்பாக்கியிலுள்ள இரண்டு குண்டுகள் அவனது மார்பில் ஊடுருவியுள்ளது. துப்பாக்கிப் பிரயோகமே அவனது மரணத்துக்குக் காரணம். பிரேதப் பரிசோதனை செய்த வைத்தியர் கூறுவதும் அதுவே.

கவர்னர்:—துப்பாக்கியை பிரயோகம் செய்தது யார் என்பது தெரியவில்லை.

ஜாக்ஸன்:—அவர் தற்கொலை செய்துகொள்ள யாதொரு காரணமும் இல்லை. முந்திய இரவு அவனும் அவன் மனைவி கிரிஸ்லேனும் பலமாய் சண்டையிட்டுக் கொண்டிருந்தனராம். அவளே அவனைச் சுட்டுக் கொன்றிருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

கவர்னர்:—அவளை விசாரித்தாயா?

ஜாக்ஸன்:—அவள் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சத்தியம் செய்கிருள்.

கவர்னர்:—நல்லது. அவளை கைதுசெய்ய வேண்டாம். அவள் நிரபராதி என்பது எனக்குத் தெரியும். இன்று பிரேத விசாரணை நடத்துவோம்.

கவர்னரின் உரையைக்கேட்டு ஆச்சரியமடைந்தான் ஜாக்ஸன். "ஏன் அவ்வளவு நிச்சயமாய் சொல்லுகிறீர்கள்?" என்று வினவினன்.

கவர்னர் பதில் கூறவில்லை.

அன்று நடைபெற்ற பிரேத விசாரணையில் கவர்னர் கூறிய அபிப்பிராயத்துக்கு ஏற்ப முடிவு கூறப்பட்டது. அது என்னவெனில் சிசில்லீச் தற்கொலை செய்துகொண்டான் என்பதே. இது ஜாக்ஸனுக்கு ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளித்தது என்பதை கூற வேண்டியதில்லை.

3

நாட்கள் பல சென்றன. சிசிலின் மர்மமான மரணத்தை எல்லோரும் மறந்துவிட்டனர். விதவையான கிரிஸ்லேனிடம் அக்கரை கொள்ளக்கூடியவன் ஒருவனே. அவன்தான் ஆர்தர்மாட். இருவரது பழக்கமும் நட்பும் வளரலாயின.

சிசில் வரும்படி கொடுக்கக் கூடியசொத்து எதையும் வைக்கவில்லை. உயிருடன் இருக்கையில் எப்படி ஜீவனத்துக்கு அவனுக்குப் பணம் வந்துகொண்டிருந்தது என்பது ஒரு மர்மமான விஷயமாகவே இருந்தது.

அவனது பெட்டி பேழைகள், மரசாமான்கள் முதலிய ஜங்கம சொத்துகளுக்கு வார்சாயிருந்த அவனது விதவை அவற்றை விற்றுப் பணமாக்கிக் கொண்டாள். ஆர்தர் மாட்டின் ஒத்தாசையைப் பெற்ற அவள் சீக்கிரத்தில் அந்த தீவைவிட்டு பரதேசம் போக சித்தம் செய்து கொண்டிருந்தாள், ஆர்தர் மாட்டை அவள் மணப்பாள் என்ற வதந்தியும் உலாவிக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில் தான் எதிர்பாராத விபரீதம் நடைபெற்றது ஆர்தர் மாட் பிணமாய் கிடந்தான். கைத்துப்பாக்கி குண்டுக்கு இரையான அவனது துர்க்கதிக்கு இரங்காதவர் யாருமில்லை. அத்துப்பாக்கி அவனை

FREE

EARN Rs. TEN PER DAY. You can easily earn Rs. 10 - per day without any investment in your spare time. No labour. No secrecy. Thousands have been benefitted. Ask for samples. Full particulars sent FREE.

LONDON C. COMPANY
P. B. 165 S. M. M. LAHORE.

(EAB)

மணக்கவிருந்த கிரிஸ்லேனது துப்பாக்கியே.

எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் ஜாக்ஸன் கவர்னரது மாளிகைக்குச் சென்ருன். அவனை அமைதியுடன் நோக்கிய கவர்னர், "ஜாக்ஸன் எதற்காக பதட்டப்படுகிருய்?" என்ருன்.

ஜாக்ஸன்:—இரண்டாவது கொலையையும் செய்து விட்டு அந்த பாதகி ஓடிவிட்டாளே? நாம் இன்னும் சும்மா இருப்பது நியாயமா?

கவர்னர்:—கிரிஸ்லேன் ஆர்தர் மாட் என்பவனைக் கொன்றது வாஸ்தவம் தான், ஆனல் அது கொலையன்று. துஷ்ட நிக்ரகம் செய்த அவளைக் கண்டிக்க என் மனம் இல்லை.

ஜாக்ஸன்:—எனக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை.

கவர்னர்:—பூரா விவரங்களையும் கூறுகிறேன் கேள். கிரிஸ்லேனின் கணவனன ஸிஸில்லீச் என்பவன் உண்மையில் ஒரு ஜெர்மனியன். சென்ற மகா யுத்தத்தின்பொழுது அவன் ஜெர்மன் கப்பற் படையில் ஒரு உத்தியோகஸ்தனய் இருந்தான். யுத்தம் முடிவதற்குள் அவன் பிரிட்டிஷாரது வேவுகாரனய் மாறிவிட்டான். அத்துடன் அவன் ஜெர்மன் கடற் இலாகாவால் கையாளப்படுகிற இரகசிய பாஷையின் அந்தரங்கத்தையும் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுத்துவிட்டான்.

தனது தேசத்துக்கு துரோகம் செய்த தன்னை ஜெர்மன் அரசாங்கம் சும்மாவிடாது என்பது அவனுக்குத்தெரியும். பிரிட்டிஷ் ராஜாங்கம் அவனுக்கு வருடா வருடம் உபகாரச் சம்பளம் அளித்ததுடன் அவனுக்கு இந்த தீவில் இடவசதியையும் கொடுத்தது. இங்கே அவன் நிம்மதியாக அஞ்ஞாத வாசம் செய்யலாம் என்று நினைத்தான். கிரிஸ்லேன் என்பவளையும் மணந்து கொண்டான். ஆனல் பொல்லாத விதியின் கூற்று வேறு விதமாய் இருந்தது. நாஸிகளின் எழுச்சியுடன் அவனது கெட்டகாலம் ஆரம்பமாயிற்று போலும். அவர்களது இரகசிய திட்டத்தில் முக்கியமானது சென்ற யுத்தத்தில் தேசத் துரோகம் செய்தவர்களை சம்ஹரிப்பது என்பதே. அவர்களால் தயாரிக்கப்பட்ட ஜாபிதாவில் ஸிஸில் முதன்மை ஸ்தானம் பெற்றுவிட்டான்.

உலகமெங்கும் ஸிஸிலைத்தேடி அலைந்தவர்களில் நமது தீவுக்கு விஜயம் செய்த ஜெர்மானிய கப்பல் தலைவனும் ஒருவன். அவனுக்கு உளவு கூறியவன் ஆர்தர் மாட் என்பவன். அவன் நாஸிகளுக்காக வேவு புரிபவன் என்பதில் சந்தேகமில்லை. ஆதியில் பிரிட்டிஷ் கடல் இலாகாவில் உத்தியோகம் வகித்த அவன் அதை விட்டு விட்டு நாஸிக்களது கையாளாக மாறினன். அவர்களுக்காக வேவு புரிந்து ஊரூராய் சுற்றிய அவன் இந்த தீவுக்கு வந்த பின் ஸிஸில் யார் என்பதைக் கண்டு பிடித்துவிட்டான். ஜெர்மன் அதிகாரிகளுக்கு இரகசியதகவல் அவன் அனுப்பியதன் பயனய் தான் காப்டன் இங்கே வந்தது.

ஜெர்மனியின் உளவுகாரனயிருந்த ஆர்தருக்கு ஸிஸிலின் மனைவி மீது காதல் ஜனித்துவிட்டது. அவனை ஒழித்துவிட்டால் அவளை மணப்பதற்கு யாதொரு தடையும் இராது என்பதை அவன் நன்குணர்ந்தான்.

கப்பல் தலைவனும் அவனும் வேட்டையாடச் சென்ருர்கள் அல்லவா? அன்றிரவு அவர்கள் ரகசியமாய் ஸிஸிலுடன் தோட்டத்தை யடைந்தனர். ஸிஸிலை சந்தித்தனர். ஜெர்மனியன் ஸிஸிலுக்கு மரண தண்டனை விதித்தான். அவன் ஸிஸிலை சுட்டானே, அல்லது ஸிஸில் தானே தன்னைச் சுட்டுக் கொண்டானே? இரண்டில் ஏதோ ஒன்று நிச்சயம்.

விதவையாய் விட்ட கிரிஸ்லேனுடன் ஆர்தர் குலாவலானன். அவளை மணம் புரிந்து கொள்ளுவான் என்பதை உணர்ந்த பின் நான் சும்மா இருப்பது சரியென்பது என்று எண்ணினேன். கிரிஸ்லேனை தனியே அழைத்து எல்லா விவரங்களையும் கூறிவிட்டேன்.

ஸிஸிலுடன் கிரிஸ்லேன் அடிக்கடி சண்டையிட்டது வாஸ்தவம் தான். ஆனல் அவன் மீது அவள் பிரேமை கொண்டிருந்தாள். ஆர்தரின் பாதகத்தையும் நய வஞ்சகத்தையும் உணர்ந்த பின் அவள் பழி வாங்க எண்ணங் கொண்டாள். தனது கணவனது உயிருக்கு எமனய் இருந்த ஆர்தரை அவள் சுட்டுக் கொன்றது கொலையாகுமா? அது துஷ்ட நிக்ரகம் என்பதை இனியேனும் நீ மறுப்பாயா?

ஜாக்ஸன் மறு மொழி கூறவில்லை.

கிரிஸ்லேனை அந்த தீவில் யாரும் பார்க்கவில்லை. அவள் எங்கு சென்ருள் என்பது கவர்னருக்குத்தான் தெரியும்!

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

மார்பு உபத்திரவம்
இருமல்
முதலியவற்றை
குணப்படுத்துங்கள்.

இருமல், ஜளிப்பு, குளிரினுல் அவதிப்பட்டால் பெப்ஸ் உட்கொள்ளத் தவருதீர்கள்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. ஜலதோஷம், இன்புளுயன்ஸா கிருமிகளை பெப்ஸ் ஒழித்துவிடுகின்றன. இருமலால் புண்பட்டுள்ள தசையை குணப்படுத்தி, தொண்டைக்கு சமனமளித்து சுவாச காசம், குளிர், ஜலதோஷம்,

சுவாச பலஹீனம் முதலியவற்றை நிச்சயம் குணப்படுத்தும். எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பீ. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்ளுக.

PEPS
கிருமிநாச சுவாச மாத்திரைகள்

அரிய யோசனை
அவசியம் படிக்கவேண்டும்.

வாலிபர், வயோதிகர், பணக்காரர், ஏழை, முதலிய உங்கள் நண்பர்கள், சினேகிதர்கள், அனைவருக்கும் இந்த விளம்பரத்தைக் காட்டி இதைப் பிரபலப்படுத்த உதவும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். அம்மாதிரி செய்தால் தாய்நாட்டிற்கு சிறந்த சேவை செய்தவர்களாவார்கள்.

நான் செல்வ நிறைந்த குடும்பத்தில் பிறந்தவன். பால்யத்தில் செய்த தவறுதலால் பல வியாதிகளுக்கு இலக்கானேன். பல பத்திரிகைகளிலும் வெளியான பல மருந்துகளையும் ரகசியமாய் வரவழைத்து உபயோகித்தேன். பலனில்லை நம்பிக்கையிழந்து இறக்கத் துணிந்தேன். எதேச்சையாக அதிர்ஷ்டம் ஏற்பட்டது வியாபார சம்பந்தமாக காஷ்மீரம் சென்றிருந்தேன். ஒருநாள் மாலை காற்று வாங்கச் சென்றிருக்கையில் ஸ்ரீநகரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள மலையடிக்குச் சென்றேன். திடீரென ஒரு மகாத்மா என்னிடம் வந்தார். குளிரினுல் நடுங்கிகொண்டிருந்த என்னுடைய நிலையைக் கண்டு என் வியாதியைப்பற்றி பரிவுடன் விசாரித்தார். அவரிடம் உண்மையைக் கூறினேன். மகாத்மா அவரது குடிசைக்கு அழைத்துச் சென்று மருந்தைச் சொன்னார்.

கடவுள் சாக்ஷியாக: ஒன்று டானிக் மாத்திரைகளையும் மற்றொன்று பூச்சுத் தைலமாகவும் தயாரித்தேன். ஒரு வாரத்தில் குணமேற்பட்டது. இதனுல் அனுகூலம் ஏற்பட்டும் மகாத்மா 15 தினங்களுக்கும் பரீக்ஷிக்கும்படி கூறியது போல் உபயோகித்ததில் புதிய யௌவனம். ஜீவசக்தி ஏற்பட்டது. மருந்து தயாரிக்கும் விதத்தை மகரிஷிக்குமுன், சமூக நன்மைக்காகவே பாடுபடுவேன் என பிரமாணம் கூறும்படி கேட்டார். அந்த பிரமாணப்படி இந்த மருந்தை இந்தியா பூராவும் விளம்பரம் செய்கின்றேன். ஜீவசக்தி குறைவு, பலஹீனம், நீரழிவு, நரம்பு பலஹீனம் போன்ற சகல வியாதிகளையும் இம்மருந்து குணப்படுத்தும் உண்மையான, வன்மை, வீர்யத்தை அளிக்கும். வயதான காலத்திலும் வாலிப வீர்யத்துடனிருக்க விரும்பினுல் இந்த மருந்தை பரீக்ஷிக்கவேண்டும் எக்காலத்திலும் இதை சாப்பிடலாம். தீங்கானதோ அல்லது மயக்கம் தரக் கூடிய சத்துக்கள் கிடையாது

15 நாட்களுக்கான மருந்தின் விலை:
காஷ்மீரி மாத்திரைகள் ரூ 5-0-0
காஷ்மீரி பூச்சு எண்ணெய் ரூ. 3-0-0

இரண்டு மருந்துகளையும் சேர்த்தாற் போல் வாங்குவோருக்கு தபால் & பாக்கிங் சார்ஜ் இலவசம்.

நான் டாக்டர் அல்லது வைத்யனல்ல. இது என் தொழிலல்ல. இந்த மருந்து என்னை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறது. மகாத்மாவின் ஆக்ஞைப்படி இந்த மருந்து மூலம் லாபம் சம்பாதிப்பது பாபமாகும்.

விலாசம்:
B. MULKRAJ ANAND,
Post Box 165, (S. M. M.)
LAHORE (INDIA).

(EAB)

சித்திரமும் சிருங்காரமும்

சாந்தா ஆப்தே

"அப்னு கார்" என்ற படத்தில் மிகுந்த திறமையுடன் நடித்து நல்ல கியாதி பெற்றிருக்கும் சாந்தா ஆப்தே இப்போது மற்றொரு புதிய கம்பெனியாருக்கு நடிப்பதாக ஒப்பந்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார். "நியூஹன்ஸ் பிக்சர்ஸார்" சாந்தா ஆப்தேக்கு ஒரு படத்தில் நடிக்க 35,000 ரூபா கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர் இந்த புதிய படத்தின் பெயர் "சதி அனஸூயா" இதில் சாந்தாவுடன் துர்க்கா பாய் கோடோயும் நடிப்பார் என்று தெரிய வருகிறது. சினிமாக் கதையை எழுதியவர் எம். ஜி. தாவே. ஸ்ரீ வி. வியாஸ் இந்தப் படத்தை டைரக்ட் செய்வார்.

* * *

ருஷ்யாவில் படப் பிடிப்பு

ருஷ்யாவில் படப் பிடிப்பு வேலையைப்பற்றி வெளியாகும் ~~செய்தி~~கள் திருப்திகரமாக இருக்கின்றன. பிரபல சினிமா பட டைரக்டர்கள் இப்போது யுத்தப் பிரசாரத் தொண்டில் முனைந்திருக்கின்றனர். ஜெர்மன் படையை ருஷ்யர் தாக்குவதைக் காட்டும் படத்தை எம்லர் தற்சமயம் தயாரித்து வருகிறாராம். எம். எஸ். மென்ஸ்மீன் இப்போது "பயங்கர புருஷர் ஐவான்" என்ற படத் தயாரிப்பில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். ருஷ்ய சக்கரவர்த்தி ஒருவரது சரித்திரமே இப்படத்தின் அடிப்படையான அம்சமாகும். ஆனால் இந்தப் படத்தில் சக்கரவர்த்தியின் தோஷங்களையும் குணத்தையும் எடுத்துக்காட்டுவது நோக்கமல்ல. இந்த சக்கரவர்த்தி தான் ருஷ்யாவில் ஐக்ய உணர்ச்சியை உண்டாக்கியவர்: பல துண்டுகளாகப் பிரிந்து கிடந்த நாட்டை அவர்தான் ஒன்று படச் செய்தார். இதற்காக அவர் தார்த்தாரியர்களைத் தோற்கடித்து, பல வெளி நாடுகளுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டார். இங்கிலாந்துடன் வர்த்தக ஒப்பந்தம் செய்து கொண்டவரும் அவர் தான். ஆகவே இந்தப் புதிய படத்தில் இவான் சக்கரவர்த்தியின் சிறப்பும், ருஷ்யாவுக்கு அவர் செய்த சேவையும் சிறப்பாக சித்தரிக்கப்படும்.

* * * *

பிரிட்டிஷ் அகாடெமி

சினிமாப் படங்களை விமர்சித்து அவற்றில் சிறந்ததை பஹுமானிப்பதற்கும், உயர்தர நடிகரைப் பாராட்டுவதற்கும் அமெரிக்காவில் ஒரு சங்கம் இருந்து வருவது நேயர்கள் அறிந்ததே. இதேமாதிரி பிரிட்டனிலும் ஒரு சங்கம் சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிறந்த பிரிட்டிஷ் படத்திற்கு சன்மானம் வழங்குவதற்காக லேடி யூல் ஒரு நிதியை நிறுவ முன்வந்திருக்கிறார்.

* * * *

"கைகள் பேசுகின்றன"

அமெரிக்காவில் நடிகைகளுக்குள் ஹெடி லமாரின் கை தான் சிறந்தது என்கிறார் ஜே. ரெட்டன்பார்க் என்ற பிரபல காமிராக்காரர்: இவர் படப்பிடிப்புப் பரிசு பெற்றவர். காமிராக்காரராக இவர் சென்ற 35 வருஷகாலமாகத் தொழில் புரிந்து வருபவர். அநேக நடிகர் நடிகைகளைப் படம் பிடித்திருப்பவர்.

"க்ராஸ்ரோட்ஸ்" (குறுக்குப் பாதைகள்) என்ற படத்தில் தற்சமயம் ஹெடி லமார் நடித்து வருகிறார். இதைப் படம் பிடிப்பவர் ரெட்டன்பார்க்.

"பத்து பக்க சம்பாஷணைகளிலும் வெளியிட முடியாத, விஷயத்தை மிஸ் லமார் தமது கைகளால் விளக்கிவிடுகிறார்" என்கிறார் ரெட்டன் பார்க்.

லமார் கை விரல்களின் அசைவு, கைகளைக் கோர்த்து வைக்கும் விதம், முதலியன யாவும் அவரது குண விசேஷத்தை சூசிப்பிக்கின்றனவாம். இதை நிரூபிக்கப்போகிறாராம் படங்களின் உதவியால் ரெட்டன் பார்க்.



பம்பாயில் தாகூர் சங்கம்

பம்பாயில் புதிதாக தாகூர் சங்கம் ஒன்று ஸ்ரீமதி ஸரோஜினி தேவி தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் ஸ்ரீமதி இந்திர காந்தி பிரசங்கம் புரியும் காட்சி. (என். என். பி. எஸ்)

* * * *

புதிய 'மெட்ரோ' படங்கள்

மெட்ரோ கோல்ட்வின்மேயர் கம்பெனியார் மூன்று புதிய படங்களைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். அவை "கிம்" "ஓயிட் கார்கோ" "திவார் எ கர்ன்ஸ்ட் மிஸஸ் ஹாட்லி" என்பவை: கடைசிப்படம் யுத்தகால வாஷிங்டனைத் தழுவியது. விக்டர் ஸாவில் "கிம்" என்ற படத்தை டைரக்ட் செய்வார். இதில் மிக்கி ரூனி பிரதான பாத்திரத்தை மேற்கொள்வார். "ஓயிட் கார்கோ" என்ற படத்தையும் ஸாவில் தான் டைரக்ட் பண்ணுவார். இதில் ஹெடி லமார் நடிக்கிறார்.

* * * *

இனிமையான படம்

எங்கு பார்த்தாலும் ஒரே கலவரமாக இருந்து வரும் இந்தச் சமயத்தில் சற்று மனதிற்குத் திருப்தி ஏற்படும் படிச் செய்ய வேண்டியது அவசியமாகிறது; இது ஸினிமாக்கள் மூலம் தான் சாத்தியம். ஜீனட் மக்டானல்ட், ப்ரையன் அஹார்ன் நடிக்கும் "ஸ்மைலிங் த்ரூ" (பூராவும் சிரிப்பு) என்ற மெட்ரோ கோல்ட்வின் மேயர் படம் சினிமா அபிமானிகளுக்கு நல்ல பொழுது போக்கு. காதலும் சங்கீதமும் ததும்பும் படம் இது. இயற்கை வர்ணத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தில், மிஸ் மக்டானல்ட் பாடும் பாட்டுகள் யாவும் மனோகரமாயிருக்கின்றன: இது வரை கேட்டிராதவை. கேட்கக் கேட்க ஆனந்தத்தை யூட்டுபவை. இந்தப் படத்தில் மக்டானல்ட் இரு வேஷங்களைப் பூண்டிருக்கிறார். ப்ரையன் அஹெர்ன் நடிப்பும் போற்றத் தக்கதாயிருக்கிறது. ஸர் ஜான் என்பவராக அவர் மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். இருபது வயது யுவனாகவும். எழுபது வயது கிழவனாகவும். அவர் காட்டும் நடிப்பு ஆச்சர்யகரமானது.

* * * *

சென்ற வார நிகழ்ச்சிகள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. ஆனால் இந்திய ஸர்க்கார் பெரிதும் தடை நடவடிக்கையே எடுத்து வருகிறார்கள். ஸர்க்கார் செய்த காரியம் என்னவென்றால் மிஸ்டர் காந்தியையும் அவரது சகாக்களையும் தனித்து இருக்கும்படி செய்து விட்டார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் உடனே உறுதியான நடவடிக்கை எடுத்துக் கொண்டதால் அவர்கள் இந்தியாவையும் நேசதேசக் கட்சியையும் பெரிய விபத்தினின்று காத்திருக்கிறார்கள். இன்னும் சிறிது தொல்லையிருக்கலாம்."

பல மாகாணங்களில்

இதன் பின் சென்னை முதலிய மாகாணங்களிலும் வேலை நிறுத்தமும் ஆர்ப்பாட்டமும் இருந்து வருகின்றன. இவற்றை சமாளிக்க அந்தந்த மாகாண ஸர்க்கார்கள் தடியடியுடன், சில விடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். பல மாஜி மந்திரிகளும், காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்களும் கைதியாயிருப்பதுடன், காங்கிரஸ் காரியாலயங்கள் சோதனையிடப்பட்டு போலீஸ் வசம் இருக்கின்றன. தமிழ்நாட்டில் கமிட்டிக் காரியாலயம் பூட்டப்பட்டிருப்பதுடன், ஸ்ரீ முத்துரங்க முதலியார், ஸ்ரீ பக்தவத்சலம், ஸ்ரீ சத்தியமூர்த்தி, ஸ்ரீ ஆதிகேசவலு நாயகர் முதலிய பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

குட்டிக்கதை

★

நடன மாது!

★

"காசினி"

அவளுக்கு, அன்று முப்பத்தைந்து பிராயங்கள் முடிவடைகின்றன. முதல் நாள் இரவு முழுவதும் அவள் தூங்கவில்லை. அவள் கண்முன், பிரகாசமான விளக்குகளும், கரகோஷம் செய்து ஆரவரிக்கும் ஜனக் கூட்டங்களுமே தான் தோன்றிக் கொண்டிருந்தன.

பிறந்த நாள் விருந்து தடபுடலாக நடந்து கொண்டிருந்தது. லலிதா, சிரித்த முகத்துடன் எல்லோருடனும், உற்சாகமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். விருந்துக்கு வந்திருந்த பழைய முகங்களைக் கண்டதும், அவள் உள்ளத்தில் பத்து வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் எல்லாம் எழுந்தன.

தான் சிறு வயதில் வறுமையால் கஷ்டப்பட்டது—பிறகு தன் உயிரையும் கொடுத்து நாட்டியம் பயின்றது—கோகில்தாஸ் மஹான், தன் மேல் பரிதாபப்பட்டு, அரங்கேற்றியது—ஒரே வருஷத்தில் 'நாட்டிய சிங்காரி' என்ற பட்டம் பெற்றது—உலகத்தையே கொள்ளை கொண்டு ஐந்தே வருஷத்தில் ஏராளமான பணம் சம்பாதித்தது—சிறிது காலம் வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிப்பதற்காக மனதிற்கு இசைந்தவனை மணந்து, நடனத் தொழிலைவிட்டு விலகியது—இவை எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாய் அவள் மனதில் தோன்றின. பிறகு, அந்தக் கொடிய ரோகம் அவள் கணவனைப் பற்றிக் கொண்டது—அவள் சேகரித்த பணம் எல்லாம் வைத்தியத்தில் காற்றாய்ப் பறந்தது; அவனும் இறந்துவிட்டான்! லலிதாவின் கண்களில் அவளையும் அறியாமல் கண்ணீர் ஆறாகப் பெருகிற்று.

"லலிதா! மணியாகி விட்டது!" என்று கோகுல்தாஸ் மெல்லச் சொன்ன போது, அவள் சொப்பனத்திலிருந்து விழித்தவள் போல் திடுக்கிட்டு, பரபரப்புடன் தன் அறைக்குச் சென்று, அலங்காரம் செய்து கொண்டாள். கண்ணாடியில் தெரிந்த உருவத்தைப் பார்த்து, திருப்தியுடன் புன்னகை புரிந்தாள் அவள் மனதில் ஒரு புதிய தைரியம் பிறந்தது.

கொட்டகையில் ஏகக் கூட்டம், திரை தூக்கப்பட்டது! எல்லோரும் கழுத்தை நீட்டி, ஆவலுடன் கூர்ந்து கவனித்தார்கள். அக்கூட்டத்தில் வந்திருந்தவர் பெரும்பாலோர், லலிதாவின் நாட்டியச் சிறப்பைப் பற்றி, பெரியவர்களிடமிருந்து கேள்விப்பட்டவர்களே! தற்சமயம் 'நாட்டிய கலா சுந்தரி' என்ற பட்டத்தை அளித்து அவர்கள் போற்றும் கனகாவின் நாட்டியம், லலிதாவின் நாட்டியத்தின் முன் எம்மாத்திரம் என்று பெருமை அடித்துக் கொள்ளும் பெரியவர்களுடன், வாதாடி, சச்சரவிடும் இளைஞர்களின் தொகையே அங்கு மிகுந்திருந்தது.

எங்கும் புது முகங்கள்! லலிதாவிற்கு மறுபடியும் பழைய சந்தேகங்கள் தோன்ற ஆரம்பித்தன. அவர்கள் ஒவ்வொருவரும், தன்னிடமுள்ள குற்றங்களைக் கூர்ந்து கவனித்து, ஏளனம் செய்ய காசைக் கொடுத்து வந்திருக்கும் பிசாசுகள் என்று அவள் மனதில் தோன்றிற்று.

பின்னணி சங்கீதம் கணீர் என்று தொடங்கவும், அவள் மனதை மறுபடியும் திடம் செய்து கொண்டாள்.

"என்ன இருந்தால் என்ன? இவர்களும் மனுஷ்யர்கள் தானே! முன்பு என் நாட்டியத்தை, தெய்வீகமாகக் கருதிய இனத்தைச் சேர்ந்தவர்கள் தானே? நான் ஏன் வீணாக அதைரியப்பட வேண்டும்? நாட்டியம் என்றால் என்ன? என்பதை அவர்களுக்கு எடுத்துக் காண்பிக்கிறேன்!" என்று, தற்பெருமையுடன் நாட்டியத்தைத் தொடங்கினாள்.

ஐயோ பாவம்' இதென்ன! இதுவரை அவள் காதில் விழுந்தறியாத—"ஊஸ் சப்தம்? ஜனங்கள் எழுந்து செல்லவும் ஆரம்பித்துவிட்டார்களே? லலிதாவுக்கு மயக்கம் வரும்போலிருந்தது! திரை மறைவில் இருந்த கோகில்தாஸ் சட்டென்று திரையைவிடச் சொன்னார்.

"இந்தக் கிழங்கள் எல்லாம் இப்படி தைரியமாக முன் வந்து, நம் கண்ணில் மண்ணை அள்ளிப் போடப் பார்க்கிறதுகளே!" என்று ஒருவன் தன் சிநேகிதியிடம் சொல்லிக்கொண்டே வெளியேறினது, லலிதாவின் காதில் விழுந்தது.

அவள் மூர்ச்சை போட்டாள்!



ஸ்ரீரமண - ஆச்ரமம்.

சென்றவாரம் திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமண ஜெயந்தி கொண்டாடப்பட்டது.

ஸ்டாலின் கிராடில் நாஸிகள் அட்டூழியம்

ஸ்டாலின் கிராடு நகரை நாஸிகள் மிகவும் கோரமாகத் தாக்கினார்கள், ஆனால் அவர்கள் எண்ணம் கைகூடவில்லை. அங்கு அவர்கள் அநேகம் விமானங்களைப் பலிகொடுத்ததுதான் மிச்சம். நகரத்தில் தாக்குண்ட பகுதிகளையும், இடிந்து விழுந்து நாசமான கட்டிடங்களையும் படத்தில் காணலாம்.

இந்தியாவில் பிரஞ்சு சரித்திர சங்கத்துக்கு முதன் முதலாகத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட மாடம் கெப்ளே, இந்தியாவின் பூர்வ சரிதையிலும் கல்வியிலும் இவருக்கு சிரத்தை அதிகம்.

அவசரக் கடிதங்கள்

★

"கல்யாணி"

"மனைவி கடிதம்"

என் அன்புள்ள......

உங்கள் கடிதம் கிடைத்தது. க்ஷேமம் க்ஷேமத்திற்கு பதில் எழுதவும். எனக்கும் தனியாக இருப்பது கஷ்டமாக இருக்கிறது. எப்பொழுதும் உங்கள் நினைவு தான். குழந்தை பாலு நன்ருக விளையாடுகிருன். இப்பொழுது தானே கொஞ்சம் கொஞ்சமாக ஜனங்கள் பட்டணத்திற்கு வருகிருர்கள். அதற்குள் நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள். மாதம் பிறந்த பிறகு எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டு அவசியமானல் நான் வருகிறேன். அம்மா உடம்பு சௌகரியமாக இருக்கிறது. நதியில் ஏராளமான ஜலம். உங்களுக்கு லீவ் கிடைக்குமா? இரண்டு மூன்று நாட்கள் இங்கு வந்து இருந்து விட்டு போங்களேன். உடனே பதில் போடுங்கள்.

உங்கள் பிரியமுள்ள,
கமலா.

"கணவன் பதில்"

பிரியமுள்ள கமலா,

இன்று காலை ஆபீஸுக்கு புறப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது உன் கடிதத்தைக் கொடுத்தான் தபால்காரன். படித்துக் கொண்டே போய் பஸ்ஸில் ஏறிவிட்டேன். ஹோட்டலில் சாப்பிட மறந்து விட்டேன். நீ உடனே புறப்பட்டு வரத்தான் வேண்டும். நம் வீட்டில் எல்லோரும் திரும்பி வந்து விட்டார்கள். இங்கே ஒரு பயமும் கிடையாது. ஆகையால் யோசனை செய்யாமல் அம்மாவையும் குழந்தையும் கூப்பிட்டுக்கொண்டு திங்கட்கிழமையே புறப்படு. ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கொள்ளாமல் நேற்று முழுவதும் வயிற்று வலி. இப்பொழுது கொஞ்சம் சுமாராக இருக்கிறது. பாத்திரப் பெட்டிசாவி உன்னிடமிருக்கிறதா? இங்கே அதை காணவில்லை. உன் கடிதத்தை எதிர் பார்க்கும்.

உன் பிரியமுள்ள
சுந்தரம்.

"கமலத்தின் கடிதம்"

அருமையுள்ள என்......

நேற்று இரவு எட்டு மணிக்கு என்னை நீங்கள் நினைத்தீர்களா? சாப்பிடும் பொழுது 'பொறை' ஏறிக்கொண்டு பிராணனே போய்விடும் போலாய் விட்டது. ஆகையால் நீங்கள் தான் நினைத்திருக்கவேண்டும். இப்படி அசந்தர்ப்பமான நேரங்களில் என்னை ஞாபகமூட்டிக் கொண்டு கஷ்டப் படுத்தாதீர்கள். திங்கட்கிழமை புறப்பட முடியாது; அன்று தான் எதிராளாத்து பங்கஜத்திற்கு வளைகாப்பு. கட்டாயம் நான் இருக்க வேண்டும் செவ்வாய் புதன் வடக்கே சூலம். மேலும் அடுத்த வாரம் மாமா பெண்ணிற்கு ஒருவேளை சாந்தி முகூர்த்தம் நடந்தாலும் நடக்கும். ஆகையால் நான் புறப்படும் தேதியை அப்பரம் எழுதுகிறேன். ஞாபகமில்லாமல் செவ்வாய்க்கிழமை ஸ்டேஷனில் போய் நிக்காதங்கோ! யாரவது பார்த்தால் சிரிப்பார்கள். பாத்திரப் பெட்டி சாவி உங்கள் 'பர்ஸி'ல் தான் இருக்கிறது. பர்ஸை தொலைச்சு விட்டீர்களா? ஹோட்டல் சாப்பாடு உங்களுக்குதான். பழக்க மாச்சே! புதனும் சனியும் எண்ணெய் தேய்த்துக்கொள்ளுங்கள். உடம்பு எப்படி இருக்கிறதென்று உடனே எழுதவும். எனக்கு மிகவும் கவலையாயிருக்கிறது.

இப்படிக்கு உங்கள்
கமலம்.

காரணம் சொல்லாமல் ரயிலேறு!

அன்புள்ள கமலா,

பர்ஸ் இருக்கிறது. சாவியைக் காணேம். பாத்திரப் பெட்டியைப் பூட்டும்போது அதற்குள் நீ ஏன் கடிதக் கட்டைப் போட்டாய்? அதில் ஆபீஸ் செக் ஒன்று இருக்கிறது. அதை உடனே எடுக்கவேண்டும். இன்று பூட்டை உடைக்கப் போகிறேன். வயிற்றுவலி தேவலை. நேற்று வெங்காய சாம்பார் சாப்பிட்டேன், ஒண்ணும் பண்ணவில்லை. எனக்கு வேலை அதிகமாக இருக்கிறது. சாப்பாடு பிடிக்கவில்லை. வீட்டில் தனியாக இருக்கவேண்டும். மிகவும் கஷ்டப்படுகிறேன். லீவ் எடுத்துக்கொள்வது முடியாத காரியம். முப்பதுபேர் இருந்த ஆபீஸில் நாங்கள் ஏழு பேர் தான் வேலை செய்கிறோம். நான் எழுதுவது உண்மையாகத் தோன்றவில்லையா? பின் ஏன் இன்னும் புறப்பட்டு வந்து சேரவில்லை? அசடு மாதிரி நடந்து கொள்ளாதே. விசேஷங்களுக்கு அப்புறம் போய்த் தொலையலாம். மறுபடியும் ஏதாவது காரணம் சொல்லாமல் ரயிலேறு. கூடத்தாத்து அம்மாமி உன்னை மிகவும் கேட்டதாக எழுதச்சொன்னாள். உடனே பதில். விவரமாக எழுது. அல்லது புறப்பட்டுவரதானல் கடிதம் வேண்டாம். தந்தியடி. சிக்காய்ப்பொடி எங்கிருக்கிறது.?

உன் பிரியமுள்ள,
சுந்தரம்.

"1 மாத லீவில் வாருங்கள்"

ப்ராணபதி,

சிக்காய் பொடி டப்பா சமயலறை ஷெல்பில் அடித் தட்டில் இருக்கிறது. ஒரு வேளை அது கோலப்பொடி டப்பாவோ என்னமோ? எதற்கும் திறந்து பாருங்கள். பாத்திரப் பெட்டி பூட்டை உடைத்து விட்டீர்களா? வேறு பூட்டை போட்டு பூட்டியாய் விட்டதா? செக் அங்கேயில்லை. உங்கள் கருப்புக் கோட் பையில் வைத்துக் கொண்டீர்கள். கோட்டை வண்ணனுக்குப்போட்டீர்களா? உடனே கவனியுங்கள். நான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு வருகிறேன். பால்காரியிடமும், தயிர்க்காரனிடமும் சொல்லுங்கள். கறிகாய் அகப்படுகிறதா? மண்ணெண்ணெய் கிடைக்கவில்லையாமே? என்ன செய்வது? சண்டையெல்லாம் என்னமா இருக்கு? குழந்தையை அங்கே வைத்து கொள்ள முடியுமா? நீங்கள் ஒரு மாதம் லீவ் எடுத்துக்கொண்டு இங்கே வாருங்கள். அப்பாவும் அப்படித்தான் சொல்கிருர். 23 பேருடன் நீங்கள் 24-வது பேராக ஏன் இருக்கக்கூடாது? உழைத்து உழைத்து என்ன கண்டது இதுவரை? கூடத்தாத்து அம்மாமி $3\frac{3}{4}$ அணு எனக்குத் தரவேண்டும். ஞாபகமாக உடனே வாங்கிக்கொள்ளுங்கள். நான் கேட்டதாகச் சொல்லாதீர்கள். உங்கள் பதிலை எதிர் பார்த்து விட்டுப் புறப்படுகிறேன். குழந்தை உங்களை பார்க்கணும் என்கிருன்.

இப்படிக்கு தங்கள்
கமலம்.

"மற்றவை நேரில்"

பிரியமுள்ள கமலா,

விவரமாக எழுத நேரமில்லை. திங்கட்கிழமை உன்னை எக்மோர் ஸ்டேஷனில் சந்திக்கிறேன். மற்றவை நேரில். பாலுவை விசாரித்ததாகச் சொல்லு. கூடத்தாத்து அம்மாமிக்கு நான் $4\frac{1}{4}$ அணு கொடுத்திருக்கிறேன். 8 அணுவாக் அப்புறம் தருகிருளாம்.

உன் பிரியமுள்ள,
சுந்தரம்.

"உடனே பதில்"

ப்ராணபதி,

உங்கள் தந்தி கிடைத்தது நான் புறப்படவில்லை ஆனல் என்னல் இனி ஒரு நிமிஷமும் இங்கே இருக்க முடியாது. கலகம் அங்கே எப்படி இருக்கிறது? நீங்கள் வெளியில் போகாதீர்கள். பஸ்ஸில் உட்பக்கமாக உட்காருங்கள். தந்திக்குப் பிறகு ஏன் கடிதம் எழுதவில்லை? அங்கே என்ன நடிந்தது? உடனே பதில்,

இப்படிக்கு,
கமலா.

"கவலைப்படாதே"

பிரிய கமலா,

கவலைப்படாதே. இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இப்படித் தான் நாம் பிரிந்து இருக்க வேண்டும். அதற்கு வருந்தி என்ன பயன்? உலகமே தலைகீழாகப் போயிருக்கிறது. கடிதம் எழுதுவதை நிறுத்தாதே. அது ஒன்றுதான் எனக்கு மனச் சாந்தி கொடுக்கிறது.

இப்படிக்கு,
சுந்தரம்.

"என்ன செய்வேன்"

ப்ராணபதி,

உங்களிடமிருந்து கடிதமே கிடையாது. என் மீது கோபமா? உங்களுக்கு உடம்பு ஒன்றுமில்லையே? உங்கள் ஆபீஸ் இருக்கிறதா? இரண்டு மூன்று நாளாக பேபர் கிடையாது. ஒரு சமாசாரமும் தெரியவில்லை. நீங்களும் பேசாமல் இருந்தால் நான் என்ன செய்வது? உடனே பதில்.

இப்படிக்கு,
கமலா.

"பதில் பார்த்து ராஜினாமா"

பிரியமுள்ள கமலா.

நான் போட்ட மூன்று கடிதங்களுக்கு பதில் போடவில்லையே. நீ என்ன பண்ணுகிருய்? நான் வரவேண்டாமென்று எழுதியதற்கு கோபமா? இங்கு ஒன்றும் கலவரம் கிடையாது. எல்லாம் சௌகரியமாக இருக்கிறது. உன் பதிலைப் பார்த்து நான் ராஜிஞமா செய்ய வேண்டும்.

இப்படிக்கு,
சுந்தரம்.

"ஸ்டேஷனுக்கு வாருங்கள்"

பிராணபதி,

என் ஞாபகம் உங்களுக்கு மறந்து விட்டதா? தபால்காரனுக்கும் எனக்கும் நேற்று சண்டை வந்து விட்டது. நானும் அப்பாவும் திங்கட்கிழமை அங்கே புறப்பட்டு வரப் போகிறோம். ஸ்டேஷனுக்கு வாருங்கோ.

இப்படிக்கு,
கமலா.

"உயிர் வாழ முடியாது"

காதலி,

நீ என்ன விளையாடுகிருய் கடிதம் போடாமல்? நான் திங்கட்கிழமை புறப்பட்டு அங்கே வருகிறேன். மூன்று நாள் லீவ் எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீயும் அப்பாவும் ஸ்டேஷனுக்கு வாருங்கள். உன்னையும் பாலுவையும் உடனே பார்க்கா விட்டால் என்னல் உயிர் வாழ முடியாது.

இப்படிக்கு,
சுந்தரம்.

"2 நாள் இருக்கக்கூடாதா?"

பிராணபதி,

உங்கள் கடிதங்கள் எல்லாம் இன்று கிடைத்தன. என்னிடம் சொல்லாமல் நீங்கள் ஏன் திங்கட்கிழமை புறப்பட்டீர்கள்? இவ்வளவு தூரம் வந்து விட்டு இரண்டு நாளாவது இங்கே இருக்கக் கூடாதா? நான் பட்டிணத்திற்குப் போய் நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள் என்று அறிந்தவுடன் அடுத்த ரயிலில் ஏறி இங்கு வந்து சேர்ந்தேன். நீங்களும் அதே மாதிரி செய்திருக்கிறீர்கள். இப்போது என்ன செய்வது?. உங்களை உடனே பார்க்க வேண்டுமே! வரும் போது அவசரத்தில் என் பெட்டிச் சாவியை அங்கே வைத்து விட்டேன். தேடி அனுப்புங்கள் உடனே பதில்.

இப்படிக்கு,
கமலா.

"ஜாக்கிரதையாக அனுப்பு"

பிரியமுள்ள கமலா,

இங்கு வந்தவள் இங்கேயே இருக்கக் கூடாதா? என்ன அசட்டுத்தனம். பெட்டிச் சாவி இங்கே காணவில்லை. தேடியாய் விட்டது. ஞாபகமில்லாமல் பெட்டிக்குள்ளேயே வைத்துப் பூட்டியிருப்பாய். திறந்து பார். "மில்லர் லாக்" உனக்கு வேண்டாமென்றல் கேட்கிருயா? உனக்குத்தான் மறதி அதிகமாச்சே. என் மூக்குக்கண்ணுடியை அங்கே வைத்துவிட்டேன். எடுத்து ஜாக்கிரதையாக அனுப்பு.

இப்படிக்கு,
சுந்தரம்.

ஆயுர்வேத ரத்ன எஸ். பி. பிள்ளை
(ஆர். ஐ. யம். பி.) அவர்களின்

நெக்டார்	5அவு. புட்டி 1க்கு	1-4-0
கிரைப் வாட்டர்	5 ,, ,, ,,	1-4-0
ஓமவாட்டர்	24 ,, ,, ,,	1-2-0
இங்கிலீஷ் வெனிசர்	24 ,, ,, ,,	1-4-0
சர்ம வியாதி நிவாரணி	100மாத்திரை	1-0-0
பற்பொடி	20 பொட்லம்	1-4-0
கால்ரா பவுடர்	6 வேளை மருந்து	1-0-0
சுவர்ணுள் சம்மர் ஆயில்	4அவு. பு.1க்கு	2-0-0
ப்ரவலர் ரிடைனே பில்ஸ்	20க்கு	1-4-0

தபாற்செலவு வேறு. மருந்தின் பாதிக்கிரயம் முன் பணமாக அனுப்பப்படவேண்டும்.

கிடைக்குமிடம்:
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயுபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.

த ரா சு

மித்திரன் ஆசிரியர்
ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்
எழுதிய
பன்னிரு பெரியார்களின் அரிய
சொற் சித்திரங்கள் கொண்டது.
ஸ்ரீ. "வ. ரா" முன்னுரையுடனும்,
படங்களுடனும் கூடியது.
விலை ரூ. 1. தபாற் செலவு அணு. 6.
எல்லா மித்திரன் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.
மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை,
மவுண்ட் ரோடு. சென்னை.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்திஞல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்ள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்கரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனே இருந்தாலு
உடனே ப்ரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள்:—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்
மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.
மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
புரசவாக்கம் : எஸ். டி. பல்டானே.
ஊரிகம்: டி. ஜான்ஸன் & பிரதர்ஸ்

காபுல் பால் காயம்
இது சாதாரணமாக கடைகளில் விற்கப்படும் காயம் போன்றதல்ல. கலப்பற்ற அசல் பால்காயம். ஒவ்வொரு குடும்பத்துக்கும் மசாலா சாமான்களுடன் உபயோகிப்பதற்கு அத்யாவசியமானது.
10 தோலா டப்பி 1-க்கு ரூ. 1.
முத்தையா ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

இறும்

லைசென்ஸ் தேவையில்லை
ஆடோமாடிக் ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும் பயமுறுத்த ஆடோமாடிக் ரிபீடர் எவ்விதத் தொந்தரவுமின்றி 6 முறை சுடலாம். உண்மை ரிவால்வரைப்போல் சபதம் கேட்கும். சுடும்பொழுது நெருப்பு தெரியும். தீங்கான விலங்குகள் பறவைகளை விரட்ட உபயோகமானது. அவசரத்திற்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். லைசென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/4/-35 ரவைகள் இலவசம். நெ. 8888 ரூ. 5/8/- 45 ரவை இலவசம். நெ. 9999 ரூ. 6/12/- 55 ரவை இலவசம். அதிகப்படி 400 ரவை ரூ. 3/- பெல்டுடன கேஸ ரூ. 1/12/- ஆயில் ரூ. -/12/- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:— ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக்கடியாரம். ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினுல், 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன எழுதுங்கள்.

LONDON C. COMPANY,
Post Box No. 165 (S.M.M.) LAHORE (India)
(EAB)



கர்ப்பச் சேதத்துக்குப் பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலைமயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹிதமான ஜுரமானலும் மயிர் அபரிமிதமாகக் கொட்டும். சில சமயம் கூந்தல் விடாமல் உதிர்ந்து கொண்டேயிருக்கும். எந்தக்காரணத்தால் மயிர் உதிர்ந்த போதிலும் கேசவர்த்தினியைக்கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக்கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்பகேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணு 12; மேற் செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயன சாலை,
ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.